உ

திருச்சிற்றம்பலம்

# 1. பட்டினத்தார்

[ வானொலி விரிவுரை ]

குகஸ்ரீ ரசபதி

T004568
Sarasvati Mahal Library. Thanjavur

திருப்புகழமிர்தம் அச்சகம்,
89, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

In Memory of
G. Sitaram
Seniors Eng.
4568

உ
முருகா

# சைவ மெய்ஞ்ஞானிகள்

## 1. பட்டினத்தார்

டாம்...டாம்...டாம்...ஆலயத்தில் அர்த்தஜாம பூஜை. ஹர, ஹர, ஹர எனும் பத்தர்களின் கோஷ ஒலி, ஓம் ஓம் என்று கோயிலில் எதிரொலிக்கிறது. வலம் வருகிருர்கள். வணங்குகிருர்கள். வேத பாராயணம் ஒரு புறம்.

அடுத்த பிரகாரத்தில் ஆகமவிசாரணை. அதற்குஅடுத்த பிரகாரத்தில் பல்லாயிரக்கணக்கான பத்தர்கள், சிவ புராண சிரவணம் செய்கிருர்கள்.

Presented by

கடலைக் குடைந்தேன்; பொருளைத் தேடினேன்; மலைகளைக் கடந்தேன்; மருந்து தேடினேன் என்பார் போல், வன் பிறவி வாதனையும், வஞ்ச நமன் வேதனையும்; மாயவூன்றிச் சிவபுராணங்களை உணர்ந்தால், சிறக்க வருகிறது, சிவானுபவம்.

Dr. S. Chelli

புராணங்களில் உளது புராணன்; ஓடும் ஓட்டத்தில் அவைகளை ஓதினல், அவைகள் வாதத்திற்கு உரிய வரலாருகிவிடும். புரமெரித்த பெருமானுக்குப் புராணன் என்ருெரு பெயருண்டு, புனித தெய்வ சொரூபமான புராணங்களை ஓதினல், நாவில், தெய்வ இன்பத தேன் ஊறும். அதன் மூலம், அறியாமை இருள் அழியும். உணர்வார் உள்ளம் பாகாய் உருக, இப்படியே நாள் தோறும் சிவபுராணம் நடைபெறுகின்றது.

ஆலயத்தில் இருந்து வீதிக்கு வருகிரேம். ஒவ்வொரு தெருவிலும், குப்பை கூள அசுத்தமில்லை; அத்தூய்மை, வீதிகளில் வசிப்பவர் தம் அகத் தூய்மையை அறிவிக்கிறது. நடமாடும் மக்களை, நாளும் பார்க்கலாம்; அவ்வளவு பசுமை முகம். தர்மம், தானம், எங்கு சென்ருலும் இந்த அனுபவம்.

வாய்மை வளர்கிறது. உண்மை உயர்கிறது; மெய்ம்மை விலாசம் கனிவுடைய எவர் வாழ்க்கையிலும் காணப்படுகிறது.

வற்றாத ஜீவ நதியான காவேரி. கடலில் வந்து கலக்கிறது. சோலைகள் சிந்திய மலர்கள் எங்கும் மணம் கமழ்கின்றன. ஆம்! இதுதான் காவிரிப்பூம் பட்டினம்.

கண்ணையும் கருத்தையும் கவரும் காவிரிப்பூம் பட்டினத்தில், வானம் அளாவிய ஒரு மாளிகை. சுவர் எல்லாம் பொன் தகடு. பளபளத்த அத் தகட்டில், நவரத்தினங்களைப் பதித்திருக்கிறார்கள். பகலெல்லாம் ஒரே ஜோதி மயம்; சந்திரன் பிரகாசிக்கும் இரவிலோ, ஒரே தேஜோ மயம்.

யார் மாளிகை அது ? ஆம்! ஆம்! திருவெண்காடர் மாளிகைதான். அந்தப் பட்டினத்தில், பயன் தரும் செல்வம் அதிகம் படைத்தவர், அவர் ஒருவர்தான். அதனால், அவரைப பட்டினத்தார் என்று ஊரார் அழைக்கிறார்கள்.

பெரிய இரத்தின வியாபாரி அல்லவா! பல கப்பல்கள் அவர்க்குச் சொந்தம். பல தீவுகளில், அவருடைய வாணிபம், அமோகமாக நடைபெறுகிறது.

தாய் பெயர் ஞானகலாம்பிகை. தந்தை பெயர் சிவநேசர். அவ்விருவரும், பெயருக்கு ஏற்ற பெருமக்கள்.

பட்டினத்தாருடைய வாழ்க்கைத் துணைவி, அழகு மிகுந்தவள்; அறிவிற் சிறந்தவள்; அந்தக் குணநலம் சிறந்த கோதையான சிவகலையுடன், பயனுகப் பொழுது போக்கும் பட்டினத்தார், பல சாஸ்திரங்களைப் படித்தவர்.

கல்விப் பெருமிதம்; கற்றவர் நேசம்; செல்வச் சேர்க்கை; வர்த்தக வளர்ச்சி; வெளியுலகத்தில் இப்படியே ஓயாத தொடர்பு. கம்பீரமான தோற்றமுடைய அவர், இப்படி மேலான இன்ப வெள்ளத்தில் மிதந்தார்.

• • • • •

4568.



எப்போதும் ஓட்டம், ஒரேமாதிரியாக இருப்பது இல்லை. ஏறும்; அது இறங்கும். மறுபடியும் ஏறும்; இப்படியே வாழ்க்கையில் கல்லும் குத்தும்; முள்ளும் போத்தும், தடுக்கி விழுவது; அடுத்து எழுவது, அழுவது, சிரிப்பது; இதுதான் வாழ்க்கை.

ஒரு நாள் திடீர் என்று சிவநேசர் இறந்தார். ஞான கலாம்பிகை கதறினள்; ஊரார் எல்லாம் ஒக்கத் திரண்டனர்; கதறியழுதனர். கோள்ளியிட்டார் பட்டினத்தார். குடமுடைத்தார். அந்தப் புண் இன்னும் ஆறவில்லை. மாமனர் ஒரு நாள் கண்ணை மூடினர். அதை அடுத்த ஆறும் மாதத்தில், மாமனரைத் தொடர்ந்து மாமியும் சென்றுள். தொடர்ந்து இப்படியே, சார்பாக இருந்த மாபெரும் உறவினர் பலர், மாண்டனர். மண்ணுள் அவர்கள் உடல்கள் மறைந்தன. நியதியான இச்செய்தி, எவர் நினைவிலும் நிற்குதியேல், அதன் பின் இவ்வுலகம்தான், எவ்வளவு அருமையாக இருக்கும்!

ஒரு நாள் மேல் மாடியில் தனித்து இருக்கிறார் பட்டினத்தார். இவைகளை முறையே எண்ணுகிறார். எவரும் அறியாதபடி குமுறியழுதார். அப்பா, அம்மா, மாமா, மாமி, பெரியப்பா, சிறிய தந்தை எங்கே? வாணிபத்தைக் கம்பீரமாக வளர்த்த அவர்கள் முகத்தை, இனி பார்க்க முடியாது அல்லவா!

மரணம் இயற்கையாகலாம், அதை மாற்ற முடியாது என்று சமாதானம் அடையலாம். அதிர்க்கும் ஆணவத்தை அகற்ற வேண்டும்; கன்மக் களையைக் களைய வேண்டும். மயக்கும் மாயையை விலக்க வேண்டும். இப்படிப் பிறவி நோயைத் தீர்க்க அல்லவா பிறக்கிறோம். நினைவிலேயே இச் செய்தி எவர்க்கும் நிற்பதில்லையே! லௌகிக விவகாரங்களால், மாபெரும் சிவத்தை மறந்திருக்கிறோமே! இப்படி எண்ணியெண்ணி இடிந்தது நெஞ்சம். கண்கள் நீரைச் சிந்தின.

மனமே! ஆசைப்பட்டு ஆவதில்லை! நீ எதையும் கண்டு மயங்காதே! கேள்!

" ஆசையொடு மயங்கி மாசுறு மனமே!
கண்டன மறையும்; உண்டன மலமாம்;
பூசின மாசாம்; புணர்ந்தன பிரியும்
நிறைந்தன குறையும்; உயர்ந்தன பணியும்
ஒன்றென் றொருவழி நில்லா "

கண்ணால் பார்த்தோம், ஒரு காலத்தில்; பார்த்த அம் மாபெரும் தோற்றங்கள் மறைந்தன. ருசித்துப் பார்த்தது அறுசுவை. உண்டன எல்லாம் அழுக்காய் ஒழிந்தன. இந்த அனுபவத்தை மறக்கலாமா? மணம் கமழ வாசனை பூசினோம். வெயர்த்த பின், பூசிய அந்த வாசனைத் திரவியம் அழுக்காகி நாறுவது அறியாயா? சேர்ந்து வாழ்ந்தவர் செத்துப் போயினர். மேடு பள்ளமாகிறது; பள்ளம் மேடாகிறது. உபதேசப்படி, எவரும் உருப்படுவது இல்லை. அவரவர் விதிவழியாகிறது அறிவு.

" செல்வமொடு பிறந்தோர்; தேசொடு திகழ்ந்தோர்
கல்வியில் சிறந்தோர்; கடுந்திறல் மிகுந்தோர்;
கொடையில் பொலிந்தோர்; படையில் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர்; நலத்தினில் வந்தோர்
எனையர் எம்குலத்தினில் இறந்தோர்;
அனையவர் பேரும் நின்றில."

கல்வி மிக்கவர், செல்வ மிக்கவர், அழகு நிறைந்தவர், வீர தீரர்கள், ஆ! ஆ! அவர்கள் போன இடத்தில் புல்லும் முளைத்தது. அவர்கள் பெயரும் மறைந்தது.

இவைகளைக் கண்டிருந்தும், மனமே! என்ன மறதி! உன் இறுமாப்பு குறையவில்லையே! போலி கௌரவம் போய்த்தது இல்லையே! வேண்டாம்! இந்த வீண் ஜம்பத்தை விட்டுவிடு!

" மறவா மனத்து மாசறும் அடியார்க்கு
அருள் சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்தனை
பேசு வாழி பேசு வாழி !"

புரிகிறதா! கன்று தாயை எண்ணிக் கதறும்; அது போல், மன்றுள் ஆடும் மணியே! என்று கூவியழைத்துக்

குமுறுகிருர்கள் பக்தர்கள். ஓடி வந்து பால் உதவும் தாய் போல், விரைந்து வந்து அருள் புரிவான் விமலன்

பாடுகிருர்; இப்படிப் பாடிக்கொண்டே இருக்கிருர் பட்டினத்தார். இரவு மணி எட்டு.

• • • •

"திருவெண்காடா! எழுந்திரு அப்பா."

"ஏன் அம்மா!"

"ஏனு? இன்னம் சாப்பிடவில்லேயே நீ!"

"வேண்டாம் அம்மா! பசியில்லே."

"ஏன் பசியில்லே? என்னடா முகம் வாடியிருக்கிறது?"

"அப்படி ஒன்றும் இல்லேயம்மா!"

"என்ன அப்பா இது? பகலிலும் உண்ணவில்லே நீ! என்ன, உடல் நலமில்லேயா? ஏதேனும் கவலேயா?"

"அம்மா! எடாத தேகம் இல்லே. இந்த உடல் விழாத இடம் இல்லே; பெருத தாயில்லே; உருத உறவில்லே. உண்ணுத உணவில்லே; பண்ணுத தொழில் இல்லே. இந்தப் பீடை வாழ்க்கையில் கவலேயாயில்லே? அதுதான் கடல் அலேபோல் வந்து வந்து போகிறதே!"

"ஹஹ் ஹா ஹா! ரொம்ப சரி. வருந்தியிருந்தால், வருவது தடைப்படுமா என்ன?"

"தடைப்படாதுதான்; கர்மத்தை அனுபவிக்கும் நாம், வினேயை மேலும் விளேவிக்காமல், ஈசனே நேசித்து இருக்கலாம் அல்லவா!"

"அப்பா! உன் தந்தையும் யானும் விசேடதீக்ஷை செய்துக் கொண்டோம். உயிர் போகிற நாள்வரை, சிவ பூஜை செய்தார் உன் பிதா. அவரைத் தொடர்ந்து, ஆண்டவனே நானும் ஆராதித்து வருகிறேன். உனக்கும் சிவ தீட்சை நடந்து இருக்கிறது. நாம் ஒன்றும் தவறு செய்யவில்லேயே! உரிய வேளேயில் உண்ண வேண்டும், பரமனே

யும் பஜிக்க வேண்டும்; தெரிகிறதா! நீ எழுந்திரு. கொஞ்சம் பால் சாதம் சாப்பிடு.''

வயிறு வீங்கி வெடிக்கும்வரை, பிள்ளைக்கு ஊட்டுவதில் நாட்டம் கொண்டவள் தாய் என்பர். அதைப் பரந்த மன முடைய உங்களிடத்திலும் பார்க்கிறேன். இப்போது என் மனம் சரியில்லை! நீ போய்ச் சாப்பிடம்மா!

சரி! அந்தச் சாம்பசிவம், உன் விஷயத்தில் எப்படிச் சங்கல்பித்திருக்கிறதோ? யார் அறிவார்? என்று சென்ற தாய், அன்றிரவு தானும் உண்டிலள் தந்தையிடம் இருந்த பக்தி, மைந்தனிடமும் தழைத்துளது என்று எண்ணி பாயில் தான் படுத்தாள். உறக்கம் வரவில்லை, புரண்டு புரண்டு துயில்வர முயலலாயினள்; பட்டினத்தார் மன மாறுதலைச் சில காலமாகப் பார்த்து வந்தவளாதலின், என்னென் னவோ நினைக்கிறாள். குழம்புகிறது வயிறு. குடல் ஆடு கிறது, பாவம்.

மனைவி சிவகலை வந்தாள். சுவாமி! என்ன இது? இன்று முழுதும் பட்டினி போட்டிருக்கிறீர்கள்?

" உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத்து உரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்;
கழிந்தன கடவுள்நாள் எல்லாம்
விண்ட தாமரைமேல், அன்னம் வீற்றிருக்கும்
விழவரு வீதிவெண் காடா
அண்டரே போற்ற அம்பலத்தாடும்
ஐயனே! உய்யுமாறு அருளே !''

''என்ன பாடுகிறீர்கள்? என்ன இது? பயமாய் இருக் கிறதே!''

''பயமாய் இருக்கிறதா! ஆம் பயப்பட வேண்டியது தான். மோசமான இப் பிறவி நாசமாக, ஈசனை ஏத்துவது நலம் என்று எத்தனையோ தரம், சிவகலா! நீ சொல்வாயே! மறந்துவிட்டாயா?''

“உண்மை ஸ்வாமி! உண்மை நாம் இல்லறவாசிகள். தெய்வத்தையே எண்ணியிருந்தால் எப்படி? விவகாரங் களும் இருக்கிறதல்லவா!”

“சிவகலா! பேச்சளவில் தேனொழுகத் தெய்வ விலா சம் பேசுவது; அடுத்து அந்த அருள் நெறிக்குமாருன விவ காரங்கள்; என்ன உலகமோ இது! எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. சிறிது ஓய்வு கொடு! தனியே படுத்துக் கொள்ளப் போகிறேன்.”

“அப்படியே செய்யுங்கள்” என்று சிந்திய கண்ணீ ரோடு செல்கின்ருள் சிவகலை.

“ நெருப்பான மேனியர்; செங்காட்டில் ஆத்திநிழல் அருகே
இருப்பார் திருவுளம் எப்படியோ? இன்னம் என்னை அன்னை
கருப்பா சயக்குழிக்கே தள்ளுமோ? கண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோ? தெரியாது சிவன் செயலே !”

விக்கியழுது பாடுகிருர். பாடிய படியே படுக்கிருர். இரவு மணி 3. சிறிது நேரத்தில், லேசான நித்திரை.

* * * * *

ஆ ! என்ன அற்புதமான கனவு ! பழுத்த அடியார் ஒருவர், கனவில் அருமையாகக் காட்சியாயினர்.

திருவெண்காடா! என்ன அதிகம் கவலைப் படுகிருய் போல் தோன்றுகிறதே!

ஸ்வாமி! நமஸ்காரம். எம் பெருமான் திருவருளை அடைவது எப்படி? சிந்தித்தேன்; இதைத் தவிர ஏக்கம் இல்லை.

அது எழுதிக்காட்ட முடியாத செய்தி! எட்டில் அடங் காத கலை. தீட்சையில் கிடைத்த ஐந்தெழுத்தே துணை. உவந்து, அதனை இடையருது உருவேற்று! வாழ அதுவே வழி!

கனவு கலைந்தது. பளிச் சென்று கண் திறந்தார். உண்மையே உண்மை. “சம்போ! சங்கரா! புதையலான பஞ்சாட்சரத்தைப் பெற்றிருந்தும், இதுவரை லேசம்பட

அதை எண்ணினேன். இதற்கு அயலாக வேறு வழி இருக்கிறதோ என்னவோ என்று மலைத்தேன். மயக்கம் அகற்றிய உம் திருவருள் வாழி இ! இ! இ!'' என்று கதறினர். இந்த அலறலைக் கேட்டு தாயும் மனைவியும் ஓடி வந்தனர்.

சிவகலை! நீ சும்மா இரு! பதருதே!

திருவெண்காடா! அப்பா! என்ன இது? ஏன் இப்படி? என்னென்னவோ சொல்கிருயே?

அம்மா! ஐந்து எழுத்தைத் தொடர்ந்து உருவேற்ற, கனவில் பிறந்ததம்மா கட்டளை!

வெண்காடா! உன்னை ஒவ்வொரு நாளும் உணர்கிறேன். விமலனை வழிபடுவது விளையாட்டல்ல; காமாட்சியார் வழிபாட்டையே அந்தக் காஞ்சிபுரத்தார் சோதித்தார். பஞ்சாட்சரமே மந்திர ராஜம். அந்த ஜபம் சித்த சுத்தி தரும்.

" செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு,
அந்தியுள் மந்திரம் ஐந்தெழுத்துமே "

என்பர் மேலோர்.

பஞ்சாட்சரத் தியானம் என்ருல், அருந்தவ முனிவர்களே அஞ்சுவர். அபிஷேகிக்க இருந்த பால் குடத்தை, உக்கிர கோபத்தால் உருட்டிவிட்டார் தந்தை. அவரின் உருட்டிய காலை வெட்டிவிட்டார் மைந்தர். விசார சருமர் வழிபாடு என்ருல், அதன் மயம் ஆவர் மேலோர். புழுக்கடியில்லாத பூ; வண்டு மொய்க்காத மலர். சிலந்திக் கூடு இல்லாத புட்பம். பார்த்து அவைகளைப் பறிக்கவும், வைகறையில் மரமேறிப பூப் பறிக்கும்போது, பனியால் வழுக்காதபடி, காலில் கூர்மையான புலி நகமும், கண்ணும் வேண்டிப் பெற்ருர் வியாக்கிரபாதர். வறுமை வருத்தும் வாழ்க்கையிலும், விதைத்த விதைகளைக் கொண்டுவந்து, மகேச பூஜை நடத்தினர் மாறர். நைவேதனப் பொருள்களைக் கூடையில் இருந்து கால் தடுக்கிக் கொட்டிவிட்டு, சங்கற்பம் கெட்டதே என்று, பூட்டி அரிவாளால் ஊட்டியை அறுக்க முயன்ருர் தாயனர். கணம் புல்லரும், கலியனரும், நமிநந்திகளும் தூபதீபத்திறகு முயன்று பட்ட பாட்டைப்

பாரறியும். இந்த வரலாறுகள், வழிபாட்டின் அழுத்தமே, அவர்கட்கு வாழ்வளித்தது என்பதை அறிவிக்கின்றன. நம்போன்றவர்கட்கு, அவ்வளவு ஈடுபாடு அதனில் இருந்தால், லௌகிகம் நடைபெருதே அப்பா!

அம்மா! அவர்கள் பெரியவர்கள்; அவ்வளவு தீவிரமாக இருந்தார்கள். நாம் இயன்ற அளவு முயலலாம். புலியும் எலியும் பூசித்ததாம்; எறும்பும் குரங்கும் ஏத்தியதாம்; பாம்பும் சிலந்தியும் பஜித்ததாம்; நண்டும் நரியும் நயந்ததாம். அஃறிணைகளாகிய அவைகள் பெற்றபேறு பெரியது. உயர்திணையில் இளம் பிள்ளைகளான மார்க்கண்டேயரும், துருவனும் வழிபட்ட கதைகளை எவரும் மறந்திலர். இடி பயம் உண்டு என்ற தன் ஜாதகத்தை அறிந்து, பரமனைத் துதித்துப் பயனடைந்த கிரகபதி வரலாறும் நினைவிற்கு வருகிறது.

உண்மைதான் அப்பா! சிவலிங்க வழிபாட்டை அந்தணர்கள் செய்யட்டும். அவர்கட்கு உத்தியோகம் அது. ஆலய வழிபாடு நடைபேற, அவர்கட்கு அதிகமாக உதவி செய்! எல்லோரும் அப்படி பூஜா காரியத்திலேயே முழுகிவிட்டால், ஆஸ்ரம தருமங்கள் மிஸ்ரமிக்கும்.

உனக்கு வழி ஒன்று உண்டு. நாளொன்றுக்கு பனிரண்டாயிரம் பஞ்சாட்சர ஜபம் செய்! மந்திரசித்தி உண்டாகும். அதன்பின் ஆண்டவன், நனவிலும் கனவிலும் நல்லருள் புரிவன். அந்த அருளறிவிப்பு உண்டாகுல், அதன் பின் நீ இலிங்க வழிபாடு செய்யலாம்!

அப்படியே அம்மா! பெற்றெடுத்தீர்! பேருதவியான உபதேசமும் செய்தீர் என்று, வீழ்ந்து தாயை வணங்கினுர்.

சிவகலை! என் மகனுக்குத் தக்க மனைவி நீ என்ற உரிமையில் சொல்லுகிறேன். அவனுக்குச் சொன்னதுதான் உனக்கும்.

அப்படியே செய்கிறேன் மாமி என்று, அவர் பாதம் பணிந்தாள் மருமகள்.

கண்ணும் கருத்துமாக வெண்காடர், வர்த்தகத்தைக் கவனித்தார். மற்ற நேரமெல்லாம் பஞ்சாட்சர ஜபம்.

மனைவி சிவகலையும் அதே நிலை. தாய் ஞான கலாம்பிகை யின் செய்தியும் அதுவே. ஆ! என்ன அருமையான குடும்பம்!

* * * * *

திருவிடைமருதூரில், மகாலிங்கரை வழிபடுகிறார் சிவசருமர். அவர் தேவி சுசீலை. செல்வத்தைச் சிவார்ச்சனைக்கும் மகேச பூசைக்குமே செலவிட்டு, வறுமை பெருகி வருந்துகிறார். செல்வம் குறைந்தாலும் அவர் உள்ளம் குறையவில்லை. ஒரு நாள், பஞ்சாட்சர தியானத்தில் இருக்கிறார்.

சிவசருமா! இவ்வூரில் காருண்யாமிர்த தீர்த்தக் கரை. அங்கே ஒரு வில்வ மரம். அதன் அடியில், இளம் சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனைக் கொண்டுபோ! திருவெண்காடரிடம் கொடு! வேண்டிய உதவி விளையும் என்று, அரிய தியானத்தில் அவர்க்கு ஒரு அறிவிப்பு பிறந்தது.

திடுக்கிட்ட சிவசருமர் விழித்தார். மனையாளிடம் செய்தியைக் கூறினார். வியப்பு பெருகியது. ஆண்டவன் கட்டளை யல்லவா! போய்த்தான் பார்க்கலாமே என்ற எண்ணம்.

* * * * *

புனித தம்பதிகள் புறப்பட்டனர். இளஞ் சிறுவர் ஒருவர் குறித்த இடத்தில் இருந்தார். அவர் திருமுகதேஜஸ், அடடா! என்ன அற்புதமாக இருக்கிறது. உற்று நோக்கிய தம்பதிகட்கு உடல் சிலிர்த்தது.

அப்பா! நீ யார்?

யாரென்று உங்கட்குத் தெரிகிறது?

தெய்வம் போல் காட்சி யாகிறாய்.

பார்ப்பார் பார்வையைப் பொருத்தது எதுவும்.

எங்கிருப்பது நீ!

ஹஹ்ஹாஹா. நான் எங்கு இல்லை என்று சொல்லுவது?

நீ யார் பிள்ளை?

பெற்றோர் முகமே அறிந்தது இல்லை நான்.

ஐயோ பாவம். திருவெண்காடர் பெரிய பிரபு. சிறந்த அவரிடம் உன்னைச் சேர்த்துவிடுகிறேன். உனக்குச் சம்மதந்தானு?

ஓ! அப்படியே செய்யுங்கள். உங்கட்குப் புண்ணியம் உண்டு.

அப்படியா! வா என்று அழைத்துச் சென்றனர்.

காலை மணி பத்து. வர்த்தக ஸ்தலத்தில் பட்டினத்தார். அதே நேரத்தில் சிவசருமத் தம்பதிகள் வந்தனர். பட்டினத் தார், அவர்களுடன் இருந்த பிள்ளையைப் பார்த்தார்.

நமஸ்காரம் ஸ்வாமீ! வரவேணும்; அழகான இச் சிறுவன் உங்கள் பிள்ளையா?

அவனையே யாரென்று கேளுங்கள்?

அப்படியா! உன் பெயர் என்ன அப்பா?

மருதவாணன்.

ஓ! திருவிடை மருதூர்த் தெய்வப் பெயர் அல்லவா அது; பேஷ்.

வேண்டுமானுல், இவனை உங்களிடமே விட்டு வைக் கட்டுமா என்ருர் வேதியர்.

ஏன்! என்னிடமே இருக்கட்டுமே! ரொம்பசரி; வாருங் கள் என்று மாளிகையுள் அழைத்துச் சென்ருர்.

அம்மா! அம்மா! சிவகலா! இங்கே வாருங்கள்; வந்திருப்பது யார் பாருங்கள்!

உயர்ந்த ஒரு பரிசு உங்கள் இருவர்க்கும் வந்திருக் கிறது.

அடடா! நன்ருயிருக்கிருனே; யார் இவன்?

தம்பி! உன் பெற்ருேர்கள் யார்? என்ருள் சிவகலை.

எனக்கு, அம்மா அப்பாவே இல்லை.

ஐயோ பாவம்! இனி அப்படிச் சொல்லாதே அப்பா! இனி உன் அம்மா இதோ! உன் அப்பா அதோ! என்று, மகனையும் மருகியையும் காட்டினர் ஞானகலாம்பிகை.

ஆமாம்; அது உன் பாட்டி என்று, பகபக என்று நகைத்தார் பட்டினத்தார். சிவசர்ம தம்பதிகட்குப் பொன்னும் பொருளும் ஏராளமாகக் கொடுத்தனர். உயர்ந்த சேலைகளையும் ஆடைகளையும் உதவினர்.

விரும்பிய போதெல்லாம் வரவேண்டும் ஸ்வாமீ! வேண்டுவன பெறவேண்டும் என்று உபசரித்தார்கள்.

ஆசி கூறி, மகிழ்ந்து, சிவசர்மத் தம்பதிகள் சென்றனர்.

* * * * *

ஐயா வருக! என்ருள் பாட்டி.

அப்பா வருக என்ருள் சிவகலை.

அத்தா வருக என்ருர் பட்டினத்தார்.

மூவரும் கொஞ்சி மருதவாணனுடன் இப்படி மகிழ்ந்து விளையாடினர். அவன் புன்னகை, அனைவரையும் அப்படி வசீகரித்தது. பல கோலம் செய்தனர். பார்த்து மகிழ்ந்தனர். காலத்தில் பள்ளிக்கு அனுப்பினர். வரவர அவன் பயிற்சியின் மிகுதி கண்டு, பட்டினத்தார்க்கு மயிர்க் கூச் செறிந்தது. விரைந்து இப்படியா வித்தை வளரும்? நாட்கள் பல இடையில் நடந்தன.

* * * * * *

மாளிகையின் முன் புறம், வர்த்தகஸ்தலம். பருத்த முத்து ஒன்று விலைக்கு வந்தது. பதினுயிரம் பொன் மதிப்பாகிறது என்ருர் பட்டினத்தார்.

பள்ளியில் இருந்து திரும்பிய மருதவாணன், என்ன அப்பா அது? என்ருன்.

இது, முத்து; மருதவாணு! பசிவேளை. வேர்த்த முகமே சொல்கிறது. நீ போய் சாப்பிடப்பா! நான் பிறகு வருகிறேன்.

போகிறேன் அப்பா! முதலில் அந்த முத்தைக் காட்டுங்கள், பார்க்கலாம். பள்ளியில் நவரத்தின இலக்கணம் படித்து இருக்கிறேன்; என்ன விலையப்பா இது?

பதினுயிரம் பொன்னும்!

ஐய்யய்ய! இதைத் தொட்டாலும் கூட தரித்திரம்; பார்க்கவும் கூடாது. ஆணிமுத்து அல்ல இது. இதனுள் நீர் இருக்கிறது. இதோபாருங்கள்; அவர் கேட்ட பொருளைக் கொடுத்து அனுப்புவதானால், இதை உடைத்துக் காட்டுகிறேன்.

பார்ப்போமே என்றதும், மருதவாணர் முத்தை உடைத்தார். குபுக்கென்று, அதனுள் இருந்த நீர் கொட்டியது.

அதிசயித்த பட்டினத்தார், அம் முத்தின் கிரயத்தை உரியவனிடம் கொடுத்து அனுப்பினார்.

இவ்வளவு நாளாகப் பழகி இருக்கிறேன்; மருதவாணா! எனக்கும் தெரியாத அளவு, நவரத்தின இலக்கணத்தை இவ்வளவு நன்றாகத் தெரிந்திருக்கிறாயே!

ஹஹ்ஹாஹா! இது என்ன அப்பா பிரமாதம்! இன்னும் இன்ன இன்ன நாட்டு நவமணிகள், இன்ன இன்ன நிறங்கள்; அவைகளின் அதிதேவதைகள்; பூசிக்கும் நாள்கள், தரிக்கும் தினங்கள்; குணதோஷங்கள் முதலியவற்றை, அற்புதம் அற்புதமாக விவரித்தான் மருதவாணன்.

திருவெண்காடருக்கு மெய்சிலிர்த்தது.

மருதவாணா! விமலன், உன்னிடமிருந்து விளையாடுகிறான் என்று நினைக்கிறேன். இல்லையானால், இந்த வயதில் இவ்வளவு அபாரமான அறிவு இருக்க முடியுமா என்று கட்டி யணைத்தார்; இன்பக் கண்மழை சிந்தினார். எழுந்தார். பிள்ளையுடன் மாளிகையுள் நுழைந்தார்.

சிவகலை! நவமணி இலக்கணம் அபாரமாக இவனிடம் தான் இன்று அறிந்தேன்; என் கண்ணே படும்போல் இருக்கிறது; கண் திருஷ்டி கழிய, ஏதாயினும் சுற்றியிடு.

கண்ணே மருதவாணா! வா இப்படி என்று வாரி யணைத்தாள் சிவகலை.

அம்மா! கண்ணேறு படும் என்றார் அப்பா! என் கண்ணே என்கிறீர் நீர். என் கண் திருஷ்டி யார்மேல் படும்? சொல்லும் பார்க்கலாம்?

என்ன அப்பா! சொல்கிறாய்? சொல்வது விளங்க வில்லையே என்றாள் சிவகலை.

காலம் வரும்போது, என் வார்த்தையின் கருத்து விளங்கும் என்று, இருவரையும் பார்த்து நகைத்தான் மருத வாணன்.

பிள்ளைக்கு வயது இப்போது 16. இனி, பள்ளிக்குப் போக வேண்டாம்; உங்களுடன் இருந்து வியாபாரத்தைக் கவனிக்கிறேன் அப்பா!

அப்படியே செய்யலாமே! என்று, திருவெண்காடர் மருதவாணரை வர்த்தகததில் அமர்த்தினார். வரவர அபார மாக வளர்கிறது வர்த்தகம். மகனுடைய அறிவு மலர்ச் சியை, வாணிபத்தில் கண்டு மகிழ்கிறது பட்டினத்தார் மனம். குடும்பம் குதூகலிக்கிறது. மருதவாணனது பரந்த மதிநுட்பத்தை, ஊர் முழுவதும் பாராட்டுகிறது.

கண் மண் தெரியாமல், வர்த்தகம் கம்பீரமாக நடை பெறுகிறது; பெருஞ் செல்வம், மேன்மேலும் பெருகு கிறது.

* * * * * *

அப்பா! நீங்கள் இனி ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். வாணிபத்தை நான் கவனிக்கிறேன் என்றார் மகனார்.

இடையறாத பஞ்சாட்சர ஜபத்திற்கு, அது நல்லது தான் என்று படுகிறது; ஆயினும், பணப் பெருக்கம் காணக் காண, வர்த்தக ஸ்தலத்திலிருந்து பிரியவே மனம் வரவில்லையே! ஊசலாடுகிறது இப்படி உள்ளம்.

சரி, இங்கு நீங்கள் வர்த்தகத்தைக் கவனியுங்கள். நான் கடலில் உள்ள பல தீவுகளில் சென்று, வாணிபத்தை வளர்க்கிறேன் என்றான் மருதவாணன்.

மருதவாணன் அறிவு மலர்ச்சியைக் கண்டிருக் கும் வெண்காடர், அப்படியே செய் என்று அனுப்பி வைத் தார். கடலில் பலதரம் போய்ப் போய்த் திரும்பிய மைந்தர் ஒவ்வொரு தரமும் ஏராளமான நவரத்தினங்களைக் கொண்டு வந்து குவித்தார்.

மறுபடி ஒரு நாள்,

அப்பா! நான் தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறேனே! நீங்கள் பகவானை வழிபட்டு சாந்தியாய் இருக்கலாமே! ஏன் இன்னும் இப்படி விவகாரத்திலேயே இருக்கிறீர்கள்?

செய்யலாம்; பார்க்கலாம்; இப்படியே பதில். கண்மண் தெரியாமல் பணம் புரள்கிறது; ஓய்வு கொள்ள மனம் வரவில்லை.

* * * * * *

கடலில் கப்பல்கள் போகின்றன. ஒவ்வொன்றிலும் பல வர்த்தகர்கள். மருதவாணரும் போகிறார் அந்தப் பிரயாணத்தில். ஒரு தீவில் மருதவாணர் வர்த்தகம் பிரமாதமாக நடந்தது. ஏராளமாக கிடைத்த செல்வத்தைக் கொண்டு, அத் தீவில் பல கிணறுகள், குளங்கள், ஆலயங்கள், மடம், சத்திரம், சாவடிகள் பல அமைத்த மைந்தர் அளவிலாத ஏழைகட்கும் வாரிப் பொருளை வழங்கினர்.

* * * * * *

மருதவாணா! என்ன இது? என்றனர் உடன் வந்தவர். பொருளைப் பெருக்க வேண்டும்; அதனுடன் அருளையும் வளர்க்க வேண்டும்; அப்போது தான், இருக்கும் செல்வம் இரட்டிப்பாகும்.

இத் தடவை வெறுங்கையாகச் சென்றால், திருவெண்காடருக்கு என்ன பதில் சொல்வாய்?

கப்பல் நிறைய எருமுட்டை அடுக்கியிருக்கிறேன்! ஏராளமான அவல் இருக்கிறது. அதைக் காட்டுவேன்.

எருமுட்டையா? அவலா? நன்றாயிருக்கிறது உன்பதில்! அதைப்பற்றி உங்கட்கு ஏன் கவலை? அவர் கேட்டால், நான் பதில் சொல்லிக்கொள்கிறேன்.

மருதவாணர்க்கு மதியதிகம்; வரவர வளர்ந்த அது, பைத்தியத்தில் கொண்டுவந்திருக்கிறது; அறிவு பெருகியவர் கதி அதுதானே! என்று, மேலும் மேலும் சொல்ல அஞ்சி வாய்மூடினர் வணிகர்கள்.

கப்பல்கள் திரும்பின. நடுக்கடலில் எதிர் பாராவித மாக, காற்றும் மழையுங் கலந்தடித்தது. பலநாளாக இப்ப டிப் பாதிப்பு. கப்பல்கள் அங்கங்கே தடைப்பட்டன. அவரவர் சேமித்திருந்த உணவுகள் செலவழிந்துபோயின.

வணிகர்கள் குளிரால் மெலிந்தனர். பசியோ பெரிதும் பாதித்தது. அடுப்பெரிக்கவும் விறகில்லை.

மருதவாணு! கொஞ்சம் அவல்கொடு! எருமுட்டைதான் உன்னிடம் ஏராளமாக இருக்கிறதே! உபகாரமாக, அவை களில் சில உதவ முடியுமா?

ஏன் முடியாது? ஊர் போய்ச் சேர்ந்ததும், ஒற்றைக்கு இரட்டிப்பாகத் தருகிறோம் என்று எழுதிக் கொடுத்தால், தாராளமாகத் தருகிறேன்.

எரு முட்டைக்கும் அவலுக்குமா எழுதிக் கொடுப்பது? பாவம் பிரமைதான் பிடித்திருக்கிறது. சரி பேசிப் பயனில்லை என்று எவரும் எண்ணினர். அப்படியே தருகிறோம் என் றனர்.

அவலை நிறுத்துக் கொடுத்தான். எரு முட்டைகளை எண்ணிக் கொடுத்தான். ஒவ்வொருவரிடமும் எழுதி வாங்கி ஞர் மருதவாணர்.

* * * * * *

மழை ஓய்ந்தது. புயல் நின்றது. புறப்பட்ட கப்பல் கள் பூம்புகார் எய்தின.

வணிகர்கள் விரைந்தனர். பட்டினத்தாரை அணுகினர், பிள்ளைக்குச் சித்த சபலம் உண்டாகி இருக்கிறது! ஜாக்ரதை யாகப் பாரும்! என்று ரகசியமாகக் கூறினர்.

திடுக்கிட்டார் திருவெண்காடர்.

அடுத்து மருதவாணர் வந்தார். நீராடி, உணவு உண்டு, ஓய்வெடுத்துக் கொண்டார்.

மாலை வேளை.

மருதவாணு! விசேஷம் ஏதேனும் உண்டா? என்ருர் வெண்காடர்.

ஏராளமான லாபம்; எல்லாம் எருமுட்டை உருவில் கொணர்ந்தேன்.

மருதவாணு! என்ன மெய்யாகவா சொல்கிருய்?

மெய்தான் சொல்கிறேன்; அவல் மூட்டை ஆயிரம். எல்லாம் மாளிகையின் பின் புறத்தில் அடுக்கி வைத்து இருக்கிறேன்.

என்னடா உனக்குப் பயித்தியமா என்ன?

அப்பா! ஒரு எருமுட்டையின் மதிப்பு ஒரு லட்சம் வராகன். ஒவ்வோரு வணிகர்க்கும் பத்திரம்எழுதிக்கொண்டு எருமுட்டைகளேயும் அவல்களேயும கொடுத்திருக்கின்றேன். இதோ பத்திரங்கள்!

சீ என்ன உளறுகிருய்! எருமுட்டைகட்கா எழுதி வாங்கினே?

என்ன அவ்வளவு லேசாகச் சொல்கிறீர்கள்? இதோ பாருங்கள்! என்று சென்ருன். ஒரு எருமுட்டையைக் கொண்டு வந்தான். அதை நீரில் இட்டுக் கரைத்தான். துள்ளித் தெறித்தது ஒரு மாணிக்கம். ஆ! ஆ!! என்று வாய் திறந்தார் பட்டினத்தார்.

ஒருமூட்டையைச் சக்கரைக் குத்தியால் குத்தி எடுத்துக் கொண்டு வந்தார். அதனின் பாதி அவல், பாதி பொன் பொடி.

எதிர்பாராது அங்கு வந்திருந்த வணிகர்கள் இதைக் கண்டனர். பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதை எண்ணிப் பயந்தனர்.

ஐயோ! உண்மையை உணராமல், எருமுட்டைகளே நெருப்பில் இட்டு எரித்து விட்டோமே!

கை பிசைந்தனர். அவல் எல்லாம் பொன் துகளா? அட பாவமே! மோசம்! மோசம்! மோசம் போனேமே! அலறினர் வணிகர்.

ஹஹ் ஹா ஹா! சிரிக்கிருன் மருதவாணன்.

பலபடி அவர்கள் பதைப்பதும், மருதவாணன் ஏளனமாகச் சிரிப்பதும் காண, பட்டினத்தார் மனமும் துடித்தது.

3

தானே சென்றார். எரு முட்டை ஒன்றை எடுத்தார்; கரைத்தார். பலவற்றைக் கரைத்துப் பார்த்தார். மாணிக்க மாவது, கூத்தாவது!!

அவல் மூட்டைகளை ஆய்ந்தார். ஒரு பொன் பொடி கூட இல்லை ஆத்திரம் அவர்க்கு அதிகரித்தது.

ஏமாற்றி விட்டான். வஞ்சகமும் ஒரு வாழ்வா? கொள் ளித் தேள்போலக் குதித்தார்.

என்னடா உன் சாகஸம்? பணத்தை விரயமாக்கி விட்டு, அநியாய நாடகமா ஆடுகிறாய்?

இல்லை. இது நியாய நாடகம்!

எது நியாயம்?

என் அளவில் மாணிக்கத்திற்கும் எருமுட்டைக்கும் ஒரேமதிப்புத்தான். அவலிற்கு உள்ள மதிப்புத்தான் பொன்னிற்கும்.

செய்வதைச் செய்துவிட்டு எதிர்த்தா பேசுகிறாய்? எட்டி மருதவாணரைப் பிடித்தார். இழுத்துச்சென்றார். மாளிகையில் உள்ள அறை ஒன்றில் அடைத்தார். கதவைப் படீரென்று சாத்தினார். பூட்டிட்டார்.

இன்று இரவு இவனுக்கு யாரும் சோறு போடாதீர்கள் என்று, கண்டிப்பான உத்தரவு இட்டார். திரும்பினார். வர்த்தக ஸ்தலத்திற்கு வந்தார். அஞ்சிய வணிகர்கட்கு ஆறுதல் கூறினார்.

* * * * *

இரவு மணி ஒன்று. ஊரடங்கி எங்கும் நிசப்தமாக இருக்கிறது. தந்தைக்குப் பின் அரியணையேறிய சோழ அரசர், அன்றுதான் முதன்முதல் அமைச்சருடன் நகர் சோதனைக்கு வந்தார்.

பட்டப் பகல்போல் நிலவு காய்கிறது. அந்த நில வொளியில் பட்டினத்தார் மாளிகை பளபள என்று மின்னு கிறது.

அமைச்சரே! என்ன அது?

அதுவா! நவகோடி நாராயணர் என்னும் திருவெண் காடர் மாளிகை. பொன் தகடுகள், சுவர்களில் பொருத்தப் பெற்றிருக்கின்றன. அதன் மேல் பதித்த நவரத்நப் பளபளப்பு அது!

அப்படியா! அரச செல்வத்தினும் உயர்ந்த இப் பெரும் பணக்காரர்க்கு ஏன் வருமான வரி போடக்கூடாது?

யோசிக்க வேண்டியதுதான். மந்திரியும் மன்னரும் இப்படி மெதுவாகப் பேசியபடியே சென்றனர்.

இப்படி விழுந்தது இராஜ திருஷ்டி.

திருவெண்காடர் அன்று இரவு உணவு கொண்டிலர். அவர்க்கு உறக்கமும் வரவில்லை. இரவு மணி இரண்டு. அதன் பின் தன்னையே மறந்தார். சிறிது கண்ணயர்ந்தார்.

* * * * *

ஹஹ்ஹாஹாஹா! பெருஞ் சிரிப்பு.

யார் அது? என்று திரும்பினர். எதிரில் மருதவாணர் இருக்கிறார்.

வெண்காடா! பெருஞ் செல்வக் குடும்பத்தில் பிறந்தாய்! கல்வியும் சிறிது கற்றாய்! என்பால் அன்பும் கொண்டாய்! தோற்றம் உண்டேல், மரணம் உண்டுஎன்பதையும் உணர்ந்தாய்! கவலைப்படும் உன் கனவில் வந்தேன். உரு வேற்று ஐந்தெழுத்தை என்று உபதேசித்தேன். உன் தாயும் அது குறித்து உணர்த்தினள்.

பெரிதும் ஜபத்தைப் பெருக்கி, அருட்சித்தியை நீ அடையவேண்டும். உன்னை அதற்கென்றே ஊக்கினேன். மதி குலைந்த நீ, அதை உடனுக்குடன் மறந்தாய்! பொருள் செல்வத்தில் புரள்கிறாய்! உடன் தொடர்ந்துவருவது ஒன்று மில்லை; இதை அழுத்தி அறிவிக்க எண்ணினேன்.

மருதவாணன் உருவில் வந்தேன். ஏராளமான பொருளை, வர்த்தகத்தின் மூலம் வழங்கினேன். அப்போதும் உன் மனம் அடங்கவில்லை!

மரண தினத்தில் எருமுட்டை தாழ்ந்தது; பொன் முட்டை உயர்ந்தது என்று தோன்றுமா? கேட்கிறேன்!

அப்போது ஓடும் பொன்னும் ஒன்றுதான். எல்லாம் அந் நிலையில் சமம் என‌லை அறிவித்தேன். உலகில் பிறந்த ஒவ் வொருவரும் பிறந்த காரணத்தை மறந்தனர். அதை உனக்கு நினைவூட்டினேன்.

இவ்வளவு உதவி புரிந்த என்னைச் சிறையில் அடைத் தாயே! சரியா இது? தகுமா இது? முறையா இது? முறை தானு? அ அ அ!

* * * * * * *

பூ...பூ...பூ... என்று அலறினர் பட்டினத்தார். கண் விழித்தார். திடுக்கிட்டு எழுந்தாள் சிவகலை.

என்ன இப்படி அலறுகிறீர்கள்? உடம்பே உதறு கிறதே! ஐயோ! ஏன் இப்படி வியர்த்துக்கொட்டுகிறது?

சிவகலா! மருதவாணன்!...மருதவாணன்!...என்று மறுபடி குழறினர்.

என்ன சொல்கிறீர்கள்? குழந்தையைப் பாழும் கோபத் தால் பட்டினிபோட்டீர்கள்! சிறையிலும் அடைத்திருக்கி றீர்கள்! என் மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா?

நீ போய்ப் பார்! சிவகலா! மருதவாணன் என்ன செய் கிருன் பார்!

சென்ருள் சிவகலை; ஜன்னலைத் திறந்தாள். திடுக்கிட் டாள். அலறிளுள்.

என்ன சிவகலை?

இப்படிவாருங்கள்! ஓடிவாருங்கள்! வீறிட்டுக்கூவிளுள்.

என்னமோ ஏதோ என்று, பட்டினத்தார் ஓடிவந்தார்.

என்ன அற்புதம்! மருதவாணன் இருந்த அறையில், ஜோதி அலை வீசுகிறது சிவகணங்கள், பவம் அகற்றும் சிவம் சிவம் என்று பாடுகின்றன. ஆனந்தம் கொண்டு ஆடுகின்றன. நந்திதேவர், பிரம்மதேவர் முதல் யாவரும் வணங்கி வலம்வர, அடியார் பலருடன், சிவபிரான் திரு வோலக்கமாக வீற்றிருக்கிருர்.

என்றும் காணுத காட்சி. கண்கள் கூசின. கைகள் தலைமேல் ஏறின.

பிரபோ! பிரபோ!! அலறினர் பட்டினத்தார்; கால்கள் தள்ளாடின; அடியற்ற மரம்போல் விழுந்தார். மூர்ச்சை யாயினர்.

ஜோதியலைகளைத் தவிர வேறு ஒன்றும் தோன்ருத சிவகலை, கண்கள் கூசி, தானும் விழுந்து மூர்ச்சித்தாள்.

பொழுது விடிந்தது. இருவரும் விழித்தனர். ஜன்னல் வழியே நோக்கினர். சாதாரண அறை. மருதவாணர் படுத்துக்கொண்டு இருக்கிருர். இரவு கண்டது கனவா? கண் மயக்கமா?

திருவெண்காடர் கடனை முடித்தார். நீராடினர். அனுட்டானம் செய்தார். மருதவாணர் இருந்த அறைக்கு வந்தார். கதவைத் திறந்தார். அஞ்சினர்போல மருதவாணர் எழுந்தார்.

பட்டினத்தார் அவர் பாதங்களில் விழுந்து பணிந்தார்.

புன்மைப் பிழை புரிந்தேன்; அவை பொறுத்தாண்டிடல் வேண்டும்
வன்மைக் கொள நினையாது கொள்; மருதப் பெருமா நீ!
நன்மைப் பொருளாய் வில்லிடு நாதப் பொருளாய
தன்மைப் பொருளாய் நின்றிடு தனியே! எனை முனியேல்!
பூவின் மணம்போலே உயர்புனிதா; எனை முனியேல்!

ஓ...ஓ...ஓ என்று கதறி யழுதார். தாய் வயிற்றில் பிறவாத தருமதுரையே; என் ஒருவனை ஈடேற்ற எத்தனை நாள் முயற்சி? லௌகிக வாழ்க்கையால் கண்ணிழந்தேன். கடல்மடை திறந்தது போல் பெருகும் உமது கருணையைப் புரிந்துகொள்ளாது போனேன் என்று விம்மி யழுதபடி விழுந்தார்.

அன்பனே! இந்த ரகஸ்யத்தை எவர்க்கும் தெரிவிக்க வேண்டாம்!

அப்படியே பிரபு! அப்படியே!

வெளியில் போய்விடு! ஜாக்கிரதை!

அப்படியே செய்கிறேன் என்று அறையை விட்டு வெளிப்பட்டார். அங்கிருந்து நேரே வர்த்தக ஸ்தலத்திற்கு

வந்தார். அக மனம் மருதவாணர் பால்; புற மனம் வியாபாரத்தில்.

* * * * *

காலை பத்துமணி; அரசாங்க சிப்பந்திகள் வந்தனர். வரவேணும் என்று அவர்களை உபசரித்தார். தங்கள் செல்வத்தை அளந்து வர, அரசர்பிரான் ஆக்ஞை!

ஆஹா! தாராளமாகச் செய்யலாம்.

தலைமைக் குமாஸ்தா சேந்தனுர்; சிறந்த சிவ பக்தர் அவர்; பட்டினத்தாரிடம் பஞ்சாட்சர உபதேசம்பெற்றவர்.

சேந்தனுர்! முதலில் இவர்களை அழைத்துச்செல்லும்!

குறிப்புணர்ந்த அவர், வாருங்கள் என்று அழைத்துச் சென்றுர்.

வந்தவர்கள் உணவருந்தவேண்டும்; யாராய் இருந்தாலும் சரி. இங்குள்ள வழக்கம் அப்படி, மறுக்கப்படாது என்று அவர்களை உணவுண்ணச் செய்தார். இராஜ போஜனம் உண்ட சிப்பந்திகள் வியந்தனர். திரும்பி மறுபடியும் வர்த்தக ஸ்தலத்திற்கு வந்தனர். வெள்ளித் தாம்பாளத்தில் நான்கு சிப்பந்திகட்கும் தாம்பூலம். ஒரு பெட்டியைத் திறந்தார்; ஒரு பிடி அளவு ஒவ்வொருவருக்கும் ரத்தினங்கள் தக்ஷிணை.

அரச சிப்பந்திகள் அதிசயித்தனர். வருகிறோம் என்று எழுந்தனர்.

வந்த வேலையைத் தொடங்கவில்லையே என்றுர் வேண்காடர். அதை நாளையதினம் ஆரம்பிக்கின்றோம் என்று சென்றனர்.

பகல் மணி 12. வேண்காடருக்கு மனத்தில் ஒரே குழப்பம். இராஜ திருஷ்டி விழுந்ததா! சரி சரி; இனி என்னென்ன நேருமோ என்ற ஏக்கம் பிறந்தது; எழுந்தார்; மாளிகையுள் நுழைந்தார்; மருதவாணர் இருந்த அறைக்குள் புகுந்தார்; அவர் அங்கு இருந்தால்தானே?

என்ன இது? எங்கே மருதவாணர்? ஐயோ! அமல மூர்த்தியை முதலில் அறியாதிருந்தேன். கனவில் அறிந்

தேன். காலையில் தொழுதேன். "வெளியில் போ" என்ருர்; விளங்கவில்லை பொருள்! விமலனைப் பிரிந்தேன்; வியாபாரத் தலம் சென்றேன்.

ஆ! எவ்வளவு தவறுகள்? தாய் இழந்த கன்று போல் தடுமாறிய வெண்காடர் அங்கிருந்து திரும்பினர்.

பொல்லாத அஞ்ஞானமும் ஞானமும் போராடும் போது, வீணன அஞ்ஞானந்தான் வெல்லுமா என்ன?

ஸ்வாமி! மருதவாணன் தங்களிடம் தரும்படி தந்தப் பெட்டி ஒன்றைத் தந்தான். அவனை எங்கே அனுப்பினீர்கள்?

அப்படியா? அதை இப்படிக் கொடு; வழுவழுப்பான அப்பெட்டியை வாங்கினர்; திறந்தார். அதனுள் மடித்துச் சுருட்டிய ஒரு பட்டுத் துணி. என்ன அது என்று எடுத்தார்.

பல மடிப்பான அதைப் பிரித்தார். நைந்த நூல் நுழைத்த ஒரு காதறுந்த ஊசி. அதனுடன் ஒரு துண்டு ஓலை.

**"காதற்ற ஊசியும் வாராதுகாண் நும் கடைவழிக்கே"** என்று உபதேச வாக்கியம் இனிது அதில் எழுதி இருந்தது.

என்போல் ஓட்டைக்காது உன்செவிகள். நைந்த நூல் போன்ற சாஸ்திர விசாரணை, ஓட்டைச்செவி வழி உறவாடி இருக்கிறது. இதனுல்தான் என்றே உருப்படியாக வேண்டிய நீ, உலக பந்த பாசத்தில் ஒட்டி இருந்திருக்கிருய்! தெரிகிறதா?

அரும்பாடுபட்டு சேர்த்த செல்வத்தில், செல்லாத காசேனும் உன்னைத் தொடருமா? நீ இதுவரை செய்திருந்த சிவபுண்ணியந்தான் உனக்கு இறுதிவரை துணை. ஜாக்ரதை என்று எதை எதையோ அவைகள் மேன்மேலும் அறிவிக்கின்றன!

அவ்வளவுதான். இருவினை தீர்ந்தது. மும்மலம் முடிந்தது. நாற்கரணம் சிவ நற்கரணம் ஆயிற்று. ஐம்புலனும் ஒரு வழி மலர்ந்தன. ஆறு பகையும் அழிந்தது.

ஏழு பிறப்பும் வீழ்ந்தது. எண்வகை சித்திகளும் எய்தின. ஒன்பது நிலையும் தாண்டினர்...பரமானந்த வெள்ளம் பத்துத் திசையும் பரவியது. மோதிய அதனுள் மூழ்கினர். தன் வசம் தளர்ந்தது. பரவசம் பிறந்தது. திருவாய் திறந்தார். படபடத்து வந்தது சில பாடல்கள்.

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டி என் மொய்குழலாள் கையின் முன்கொடுத்துக்
கட்டியிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப்பிரிய என்றோ இங்ஙனே சிவன் மீண்டதுவே!

உண்மைதானே; பிரகிருதியின் பிராந்தியெல்லாம் தீர்க்கத்தானே மருதவாணராகச் சிவபெருமான் வந்தார்.

வாதுற்ற திண்புயர் அண்ணுமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலும் நெஞ்சே! இந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காண் நும் கடைவழிக்கே!

மலைபோன்ற செல்வமானாலும், மரணத்தின் பின் தொடருமா என்ன? சொல்வது சுலபம். நினைவில் இச் செய்தி. இவ்வளவு நாள் பொறுத்துத்தானே நிழலிடுகிறது.

* * * * * *

திருவெண்காடா! என்ன இது? என்றாள் தாய்.

மகனாக வந்த மருதவாணன் மலைமகள் மணாளன்; அம்மா! ஆண்டவனே குருவானான். நீ வெளியில்இரு என்று அரிய உபதேசம் அருளினன் என்றான். ஆண்டவனுடைய அருள் வெளியில் ஆன்மா வந்து அளவளாவும் நாளே நாள்! அம்மா! உனக்குக் கோடி கோடி கும்பிடு.

அப்பா! என் கடனை நிறைவேற்றிய பின் நீ எங்கும் செல்லலாம்! உன் போக்கை உணர்ந்தே யிருந்தேன்; இப்படித்தான் ஆகும் என்று இடை இடை நினைவு எழுந்தது. இயற்கையை எவரும் மறுக்க முடியாது அல்லவா?

யான் குடியிருந்த வீடு தங்கள் திருவயிறு. குடியிருந்த வீட்டுக்குக் கொளளி வைப்பேன்! அந்நாள் வரை, இவ்

வூரில் இருப்பேன் என்று அறிவித்தார்: வீட்டை விட்டு வெளிப்பட்டார். சிவகலை தொடர்ந்தாள்.

* * * * * *

எங்கு வருகிறாய்?

தங்களை யன்றி எனக்குக் கதி வேறு ஏது?

நான் கண்ட கண்ட இடம் செல்வேன். ஆடையின்றிச் செல்கின்றேன். உனக்கு அது முடியாது! வெளிப்படு என்ற கட்டளை எனக்குத் தான். அடியாரிடம் அன்பு வை! இருந்த இடத்தில் இரு. ஐந்தெழுத்தைத் துணைகொள்! பதியின் வாக்கை யுணர்ந்து அதை உருவேற்றியிருப்பதுவே உன் விரதம். அதைப் பங்கப் படுத்தாதே. முதன்மை அவ் வழியில் உனக்கு முத்தி என்று உரைத்தார்; விறு விறு என்று நடந்தார்.

ஆறி சிவகலை அடங்கினள். வருந்தி மனையுள் புகுந்தாள். தலைமைக் குமாஸ்தா சேந்தனார், விவரம் உணர்ந்தார். அலறினார். ஓடி வந்தார். பட்டினத்தார் பாதங்களில் பணிந்தார்.

சேந்தரே! நம் செல்வம் என்று இருப்பவைகளை வாரி ஏழைகட்கு வழங்கிவிடும்! பயன் விளைய யாம் உபதேசித்த பஞ்சாக்கரமே தூய உமக்குத் துணைசெய்யும் என்றார்.

ஆடையின்றியே நடந்தார். வீதியில் கண்டவர் விம்மினர். துறவியாயினர் என அறிந்தனர்.

பெரியப்பா! சிற்றப்பா! அத்தான்! என்று, எங்கும் அலறுகுரல் எழுந்தன. எங்களை இப்படிக் கை விடலாமா? என்று வணிகரும் பிறரும் வாய் விட்டுக் கதறினர்.

ஊரிலுள்ள ஒரு பொது மண்டபம். அங்கிருந்த மேடை மேல் அமர்ந்தார்.

மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும் தன் வாசல் மட்டே
இனமான சுற்றம் மயானமட்டே! வழிக்கு ஏது துணை?
தினையாம் அளவு எள் அளவு ஆகிலும் முன்செய்த தவம்
தனையாள என்றும் பரலோகம் சித்திக்கும் சத்தியமே!

அவரவரைப் "பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே" என்றார். புழுதிக் காற்று விர் விர் என்று அடிக்கிறது; மேனி யெல்லாம் படுகிறது மண்.

ஐயோ! என்ன அருமையாக வளர்த்த மேனி, பொன்னான மேனியில் புழுதி படுவதோ என்று புலம்பினர் உறவினர்.

எரியெனக் கென்னும்; புழுவோ எனக்கெனும்; இந்த மண்ணும்
சரியெனக் கென்னும்; பருந்தோ எனக்கெனும்; தான்புசிக்க
நரியெனக் கென்னும்; புன்னாயெனக்கென்னும்; இந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன்; இதனால் என்னபேறு எனக்கே?

என்ற பாடலைப் பட்டினத்தார் பாடினர். இவ்வளவு பெரிய செல்வத்தை இழக்க, உமது மனம் எப்படித் துணிந்தது? ஓ வென்று கதறினார் ஒருவர்.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டெனும்படிக் கேட்டு விட்டோம்; இனிக்கேள் மனமே!
ஓடுண்டு கந்தையுண்டு உள்ளே எழுத்தைந்தும் ஓத உண்டு
தோடுண்ட கண்டன் அடியார் நமக்குத் துணையும் உண்டே!

இவ்வளவு விரக்தி, பெருந்தணிகரான இவர்க்கு எப்படி வந்தது? ஒருவரை ஒருவர் நோக்கி மொழுவுகின்றனர்.

"ஊரீர் உமக்கோர் உபதேசம் கேளும்!"

கண்ணுண்டு காண; கருத்துண்டு நோக்க; கசிந்துருகிப்
பண்ணுண்டு பாட; செவியுண்டு கேட்க; பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த; எதிர் நிற்க ஈசன் இருக்கையிலே,
மண்ணுண்டு போகுதையோ, கெடுவீர் இந்த மானுடமே.

வரதராஜரை வழிபடவே இவ்வுலகில் வந்தோம்: கண்ணையும் காதையும் விரையம் செய்யலாமா? பார்க்கும் இடம் எல்லாம் அமல பரமனுடைய அருள் முத்திரை. அதைப் பார்ப்பவரே பாக்கியசாலிகள். கேட்பன எல்லாம் அவன் அருள் கீதம். அதைக் கேட்கும் வழியில் மனதைச் செலுத்துங்கள் வீணே மண்ணிற்கு இரையாக்கவா உடலை வளர்த்தோம்? உங்கட்கு இதுவே உபதேசம்!

* * * * *

உணவுண்டு திரும்பிய சிப்பந்திகள், காவலரை வந்து கண்டனர்.

என்ன செய்தி? என்று அதிர வினவினர் அரசர்.

உணவளித்த பட்டினத்தார் தந்த தட்சிணையிது! என்று, கனம் மிக்க இரத்தினங்களைக் காட்டினர். இது தட்சிணையா யேனில் அபரிமிதமான அவர் செல்வத்தை எப்படி அளப்பது? வழி தெரிந்து கொண்டு போக வந்தோம் என்றனர்.

தட்சிணையா? இவ்வளவா? அடட! எவ்வளவு உயர்ந்த ரத்தினங்கள் வியபபடைந்தார் வேந்தார். மறுபடியும் தீவிரமாகியது மந்திராலோசனை. ஒவ்வொருவரும், ஒவ்வொரு யோசனை கூறுகின்றனர்,

* * * * *

டக்டக் டக்டக் டகடக்! அதிர்கிறது பூமி. குதிரை மேல் இருவர், அவ்வளவு வேகமாக வருகின்றார்கள். மந்திராலோசனை மன்றத்தின் அருகில் அப்படி அதிர வருவது கூடாது. மன்னர் சினந்தார்.

குதிரை மேல் இருந்து குதித்த ஒற்றர்கள், தடதட என்று ஓடி வந்தனர்.

மகராஜ் என்று வணங்கினர்.

பட்டினத்தார் ½ மணிக்குமுன் துறவியாயினர்; கோவண ஆண்டியானர். ஊரே அல்லோல கல்லோல மாக இருக்கிறது என்று அவர்கள் அலறினர்.

திடுக்கிட்டது அரசர் மனம். அப்படியா! கொஞ்ச நேரத்திற்கு முன் குபேரர்; இப்போது கோவணாண்டியா? என்ன அதிசயம்?

மந்திரியும் தானுமாக விரைந்தார். இருவரும் குதிரை மேல் ஏறினர். சேனபதியும் வீரர்களும் தொடர்ந்தனர்.

* * * *

அவ்வளவு பொருளையும் சூறையிட முதலில் அஞ்சினர் சேந்தனர்.

அருளுடையவர் குரு; அவருடைய ஆணையை மீறுவது ஆகுமா என்று துணிவுடன், ஏராளமான பொன்னையும் மணிகளையும், வாரி வீதியில் இறைக்கிறார்.

வேகமாக குதிரை மேல் வந்த வேந்தர் அதைப் பார்த்தார். கோபத்தால் மனம் கொதித்தது. குதிரை மேலிருந்து குதித்தார். சேந்தனாரை அணுகினார்.

ஏய்! நிறுத்து! உனக்கு அறிவு இருக்கிறதா? இது என்ன அடாத செயல்! யார் உனக்கு இந்த அதிகாரத்தை அளித்தவர்?

குருநாதர் கட்டளை!

யார் அந்தக் குரு?

பட்டினத்தடிகள்!

சீ! வாயை மூடு! சித்தம் சபலித்த அவர் வார்த்தைகளைப் பொருள் படுத்தலாமா?

அவர்க்கு நெருங்கிய உறவினர் ஒருவரும் இல்லையா?

மனைவியும் தாயும் மாளிகையுள் இருக்கிறார்கள்!

அவர்கள் உமது செயலை அறிவார்களா?

தெரியாது.

அவர்களையும் அறியாமல், நீ செய்யும் செயல் எவ்வளவு அநியாயம் தெரியுமா?

எனக்கு என் குருநாதர் கட்டளை தான் முக்கியம்.

சட். பேசாதே! சரியான குரு. மூளை கெட்ட சீடன்!

சேனாதிபதி! முதலில் இவனைச் சிறையில் அடையும்! செல்லாத காசும் இனிச் சிதறுவது கூடாது. இம் மாளிகை, இனி காப்பில் இருக்கக் கண்காணியும்! ஆக்ரோஷமாக இருந்தது அரசர் குரல்.

அரசர் கட்டளைப்படியே செயல் நிகழ்ந்தது. ம்... புறப்படுவோம் என்றார்.

மந்திரியும் மன்னரும் வேகமாகக் குதிரைமேல் விரைந்தனர்.

கும்பல் கும்பலாகக் கூடிக் குடிகள் பேசும் பேச்சிலிருந்து, அடிகள் இருக்கும் இடத்தை அறிந்தனர். அங்கு விரைந்தார்.

அரசர்! அரசர் வருகிறார் என்று குடிகள் ஒவ்வொருவரும் ஒதுங்கினர். பட்டினத்தார் கோலத்தைப் பார்த்தார் பார்த்திபர். பதைத்தது மனம்.

பட்டினத்தடிகள் மன்னரை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. வேந்தர் அவர் எதிரில் வந்தார். அப்போதும் ஏறிட்டுப் பார்த்திலர்.

திருவெண்காடரே! இது என்ன கோலம்? இதனால் என்ன பயன் கண்டீர்?

வேந்தர் நீர் நிற்கிறீர்! ஆண்டி யான் எழுந்திராமல் இருக்கிறேன்! இந்த ஒரு பயனே போதுமே! இறுமாந்து இருந்தது பதில்.

அது இருக்கட்டும்! எதனால் இந்தக் கோலம்?

திருஷ்டி பட்டது.

யார் திருஷ்டி? சொல்லும்; அவன் தலையைச் சீவிவிடுகிறேன்; அதிர்ந்தது அரசர் குரல்.

திருஷ்டியையும், திருஷ்டித்தவனையும், அதன் பயனையுமே அறிவிக்கிறேன்.

தந்தைபோய் தாய்போய் தமரும்போய்
வெந்த புரமாகி விட்டேனே—முந்தவே
ஆழாழி நஞ்சுண்டான் ஆபத் சகாயனெனும்
பாழாவான் கண்ணேறு பட்டு.

பாடினார். அதனுடன் மௌனம் ஆயினர்.

பார்த்திபர் மந்திரியைப் பார்த்தார்.

அரசே! சித்தப் போக்கு சிவப்போக்கு; இத்தகையவரை, நாம் இல்லறத்தில் திருப்ப எண்ணுவது வீண்.

சரி என்று, இருவரும் சென்றனர்.

* * * * *

பசி பாதித்தபோதெல்லாம் பட்டினத்தார் இருகையாலும் பிட்சை எடுத்தார். பசி தீர்ந்த பின், மண்டபத்தில் தான் இருப்பு. வேறு எதனிலும் பற்று இல்லை.

அடியாரே உறவினர். அறியாமையே பகை. அன்பே செல்வம். அருளே இடம். தத்துவங்களே ஏவல் ஆட்கள். சாந்தமே சார்பு தவமே தொழில். தன்னிழப்பே போகம். தரையே படுக்கை. இவ்வளவுதான் பட்டினததார் செய்தி.

ஐயோ! எந்த வீதியிலும் போய், பிட்சை எடுக்கிறுரே! மானம் போகிறதே! என்று மனம் புழுங்கினர் பிரபுக்களாயிருக்கும் அவர் உறவினர்.

அவரைத் திருப்ப அரும்பாடு பட்டனர். அதனுல் ஒரு பயனும் விளையவில்லை.

எவரும் பிட்சை யிடாதபடி தடுத்தனர். அதனுல், பல நாள் பட்டினி யிருந்தார் பட்டினத்தார்.

* * * * *

அவர்க்கு ஒரு சகோதரி. அவளும் ஒரு பிரபுவின் மனைவி அண்ணன் யாசித்து உண்பது பெரிய மனவேதனையை அளித்தது. அண்ணனைத் திருப்ப, கணவரோடு அரும்பாடுபட்டாள். எலலாம் விழலுக்கு இரைத்த நீர். ஐயோ! இவன் இறந்துபோனுலும் நன்ருயிருக்குமே! என்று எண்ணியது மனம்.

பட்டினத்தார் பிட்சைக்குப் புறப்பட்டார்.

அண்ணு! அண்ணு! இன்று என் பிட்சையை ஏற்க வேண்டும்; மறுக்கப்படாது என்று விருப்பம் காட்டி வேண்டினள். கொடிய விஷம் தோய்த்த அப்பம் ஒன்றைக் கொடுத்தாள். இதை உண்டால், அவர் இறந்து விடுவார் என்பது அவள் எண்ணம்.

அண்ணன் என்பது, இந்த உடம்பால் வந்த உறவு. உடம்பு வீழ்ந்த பின், யார் அண்ணன்? யார் தங்கை? இச் செய்தியை, யாருமே அறிவர். ஆனுலும், உடனுக்குடன் மறதி. தெரிந்த செய்தியை மறந்துபோவது என்ருல மாயையின் செய்தியே மகத்தானதுதான்.

நாயும் பேயும் நரியும் போன்ற ஆயிரர் பேர் உலகில் அழியலாம். உலகிற்கு உதவ வந்த ஒரு ஞானி மறைவது உலகிற்கே பெரியதொரு நஷ்டம்; அதை அவள் அறிய வில்லையே! என்ன பாவம் இது?

காட்டுவது வாஞ்சை. நெஞ்சத்தில் வஞ்சம். உதட்டில் உறவு. வந்த அப்பத்தை வாங்கினர். ஊசி நுழையா இடத்தினும் ஞானிகள் உள்ளம் நுழையுமே! பட்டினத்தார் ஊன்றி விஷத்தை உணர்ந்தார்.

தன் வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்று, அப்பத்தை அவள் வீட்டின் இறப்பில் செருகினர். சென்றூர்; சென்றுகொண்டேயிருக்கிறூர்.

விஷத்தின் வேகத்தால் துள்ளித் துடித்து, அண்ணன் இறக்கப்போவதைக் காண மனமின்றி, கதவைச் சாத்தி உள்சென்றுள் தங்கை.

பட்டினத்தார் வாக்கு மகிமையால் அந்த மாளிகை குபீரென்று தீ பற்றியது. வேகமாகப் பரவிய தீச்சுவாலை, பக்கத்து வீடுகளையும் பாதித்தது. சோறிட மறுத்த வீடுகள் எல்லாம் சாம்பராயின. பெரும் செல்வ வாழ்க்கை சிதைந்தது. எனினும் தகுதியுடையார் சிலர் வீடுகள் தப்பின.

கண்ணகியின் கோபக்கனலால், அன்று மதுரை அழிந்தது. எனினும் இன்று அது உருவாகியிருக்கிறது.

பட்டினத்தார் வாக்கால் அழிந்த அந்தப் பட்டினத்தின் பழஞ் சிறப்பை, இன்று பார்க்க இயல்வதில்லை. இன்றும் அது ஒரு குககிராமம் போலவே இருக்கிறது. ஞானிகள் வாக்கிற்குத்தான் எவ்வளவு மகிமை!

தீக்குப் பயந்து ஓடிய பலர், அயல் இடங்களை அடைந்தனர். பட்டினத்தார் என்றுல், அதன்பின் எவர்க்கும் அச்சம் பிறந்தது.

* * * * * *

இது நிகழ்ந்த ஆறுவது மாதம், ஒருநாள் பாடையைத் தூக்கிக்கொண்டு போகிறூர்கள் பலர். பட்டினத்தார் அதைப் பார்த்தார். இறந்தவள் தன் தாய் என்று அறிந்தார்.

யாவரும் ருத்திர பூமியை அடைந்தனர். பிரேதத்தைக் காஷ்டத்தின் மேல் ஏற்றினர். அச்சமயம் பார்த்து, விறு விறு என்று பட்டினத்தார் வந்தார். அவரைக் கண்டவர் அனைவரும் அஞ்சி அகன்றனர். பரம ஞானிகளை யடைந்து பயனடையாமல், ஏன் இப்படி அஞ்சி உலகம் ஒதுங்கு கிறது? என்ன பாவம் இது?

காஷ்டத்தைப் பட்டினத்தார் கலைத்தார். கனிவு மிக்க தாய் மேனியைக் கண்டார். குமுறி எழுந்த கண்ணீரால் தாயைக் குளிப்பாட்டினர்.

பக்கத்துத் தோட்டத்தில் இருந்த பச்சை வாழமரங் களை வெட்டினர். அவைகளைச் சுமந்து கொண்டுவந்து குவித்தார். சிதை அடுக்கினர். பரப்பிய அதன் மேல் தாயைப் படுக்கவைத்தார்.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி''

பாடியபடியே அவர் உடல் ஆடியது.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

தெய்வமே! பரிவோடு இந்த உடலை எடுத்துப் பால் கொடுத்த தாய் உடல், இதோ இதோ இருக்கிறது!

அள்ளி யிடுவது அரிசியோ? தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு!

கலுழ்ந்து பெருகியது கண்ணீர். உதடுகள் துடித்தன.

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னிலங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே''

என்றார். என்ன அற்புதம்! குபீரென்று பற்றியது காஷ்டம்.

"வேகுதே தீயதனில்! வெந்துபொடி சாம்பல்
ஆகுதே! பாவியேன் ஐயகோ—மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை"

அம்மா! உன்னுடைய சரித்திரம் இதனுடன் பூர்த்தியாயிற்று! ஆ! ஹா!

மகாதேவா! இந்த ஆத்மாவிற்குச் சாந்தி தா!

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்(து)என்
தன்னையே பெற்றெடுத்த தாய்!

என்று பாடி, தாயுடலை நீறாக்கினார். அன்னையின் ஆத்மா, சிவனார் திருவடி யடைக எனச் சிறப்பித்தார். ஆண்டவனை யடைதல் ஆன அபேத நிலை விளைந்தபின்; இது தாய், இது சேய் என்ற பேதம் ஏது? அதனால் தான் "நின்பதத்தில் வந்தாளோ? என்னை மறந்தாளோ" என்றார்.

தூரத்தில் இருந்து இந்த அற்புதத்தைப் பார்த்துக் கைகுவித்த அனைவரையும் பார்த்தார்.

ஐயா! ஐயா!

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள்—பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

என்றார்.

பவமயம்; அது போனால் உலகமெலாம் சிவமயம். என்ன அற்புதமான உண்மை!

தியான சமாதியில், அந்தியேஷ்டியை நிறைவேற்றினார்.

தாயின் பிரிவு எவ்வளவு சங்கடமானது. பரம துறவியையும் அது எவ்வளவு பாதித்தது என்பதை அரியஇப் பாடல்களால் அறிகிறோம் அல்லவா!

அதிகம் வயதுதான் ஆய்விட்டதே; கண்மூடுவதுதான் கவுரவம் என்று, வீணர்களான சில பிள்ளைகள் பெற்றோர்கள் மரணம் அடைவதை விரும்புகிறார்களே எனில், அவர்கள் சேய்களின் உருவத்தில் இருக்கும் பேய்கள்; அவர்கட்கு இவ்வுலகில் வேறு உவமையே யில்லை.

குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளிவைப்போம் என்ற நியதியான தம்வாக்கு நிறைவேறிய பின், புனித பட்டினத்தார் அங்கிருந்து புறப்பட்டார். மருதவாணராகி, தன்னை ஆட்கொண்ட ஆண்டவனுடைய திருவிடைமருதூரை யடைந்தார். பலநாள் அங்கு பரமனை வழிபட்டார். அதன் மூலம் அமைதியை அவர் மனம் அடைந்தது.

பசி ஒன்றுதான் அதிகம் பாதிக்கிறது. பிட்சைப் பேயரால் முயற்சி செய்யவேண்டி யிருக்கிறது. உணவு கிடைத்து உண்டபின், பருக நீர் தேவை! நாவரண்ட நேரமெல்லாம் எங்கே நீர்? அதையும் தேடவேண்டும். என்ன சங்கடம்? அந்த முயற்சியில், சிவத்யானத்திற்கு அயலாகி, வீணே சிறிது நேரம் விரையமாகி விடுகிறதே!

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேடல்
என்று விடியுமெனக் கெம்கோவே—நன்றி
கருதார் புரமூன்றும் கட்டழலால் செற்ற
மருதாஉன் சந்நிதிக்கே வந்து!

என்று பாடினார், அதைத் தொடர்ந்து, மும்மணிக்கோவை பாடி முதல்வனுக்குச் சூட்டினார்.

* * * * *

ஒருநாள் இரவு. ஒரு வீட்டுப் புறந் திண்ணையில் படுத்தார். நினைவில் பழஞ் செல்வாக்கு நிழலிட்டது. தன்னுடைய படுக்கையறை மெத்தென இருந்த மலரணை. மணம் கமழ் பொருள்கள். பளபளத்த குளுகுளுத்த தீப ஒளிகள். கண்ணையும் கருத்தையும் கவர்ந்த அவைகள், ஒவ்வொன்றாக நினைவில் எழும்பி நிற்கின்றன.

காற்றில்லாத புழுக்கம்; வெப்பக் காற்று; கொசுக்கடிகள்தான். இப்படிப் பழைய நினைவுகளை எழுப்பின.

யார் அது திண்ணையில்? என்று அதிர்ந்தது ஒரு குரல். ஏறிட்டு நோக்கினார்.

இரவில் அவன் நகர்க் காப்பாளன் என்று அறிந்தார். பதில் சொல்லாமல், சிந்தனையில் ஆழ்ந்தார்.

என்னடா நான் கேட்கிறேன்? பேசாமல் இருக்கிறாயே?

அப்பா! தோல், நரம்பு, தசை, உரோமம், எலும்பு, உதிரம், மூளை, மனம் முதலியவைகளில், எதை நான் என்பது? பிரித்துப் பிரித்து யோசிக்கின்றேன்! கொஞ்சம் பொறு! சொல்லுகிறேன்!

என்ன திமிரான பதிலடா என்று எட்டி உதைத்தான் காவலன்!

ஐயோ! திண்ணையில் இருந்து பட்டினத்தார் உருண்டு நிலத்தில் விழுந்தார்.

எழுந்தார். உதைத்தானை நோக்கினார்.

பளபள என்ற ஒளி; அதனில் மருதவாணர் தோன்றி மறைந்தார். திடுக்கிட்டது மனம். தெய்வமே என்று அலறினார்.

மருதவாணர் நின்ற இடத்தில் விழுந்து வணங்கினார். அந்த மண்ணில் புரண்டார். அழுது கதறினார்.

அப்பா! அத்தா! அரசே! மருதவாணா! பழைய வாசனையை மறுபடி மோந்து கொள்ளாதே என்று கற்பித்த உன் திருவடிகட்கு ஆயிரம் நமஸ்காரம் என்றார்.

திருவெண்காடா! யாம் எழுந்தருளி யிருக்கும் ஸ்தலம் பலவற்றிற்கு வா!

பொருந்தி ஒரே இடத்தில் இருந்தால், பந்தம் வந்து வந்து பாதிக்கும் என்ற கட்டளை, நாத கீதமாகக் கேட்டது.

அப்படியே பிரபு! அப்படியே செய்கிறேன் என்று அப்போதே புறப்பட்டார். கும்பகோணம் முதலிய பல ஸ்தலங்களைச் சென்று சேவித்தார். பரமன் அருளைப் புகழ்ந்து புகழ்ந்து பாடினார்.

* * * * * *

திருவாரூர்க்கு வந்தார். வீதி விடங்கர் முன் வீழ்ந்து வணங்கினுர். பாடல் பல பாடினுர். அங்கு பிட்சை எடுத்து உண்டு இருந்தார்.

திருவாரூரில் ஒரு வாலிபன். அவன் அடியவர்கள் இடத்தில் அளவிறந்த அன்பை யுடையவன். பட்டினத்தாரைக் கண்டான். பயபக்தியோடு அவர்க்குப் பணி செய்தான்.

அடியவர்கள், ஆண்டவனை அகத்தும் புறத்தும் கண்டு ஆராதிப்பவர்கள். அதனுல் சிவமேயாகிச் சிறப்பவர்கள்.

அந்த அடியவர்களை, புனித மனத்தோடு நாம் பூசிப்பதே முறை. அதன் பயனுக, இம்மையிலே இன்பம்; மறுமையிலும் பெருமை; முடிவிலே முக்தி.

இதை யறிந்த பலருள், ஒருவன் அந்த தோண்டன்.

ஒரு நாள் தியான சமாதி நீங்கி, பட்டினத்தார் எழுந்தார். பின் புறத்தில், குமுறி யழும் குரல்கள்; திடுக்கிட்டார். திரும்பி நோக்கினுர்.

வயது முதிர்ந்தவள் ஒருத்தி. நடுத்தர வயதினள் ஒரு நங்கை.

அவ்விருவரும், உடலாடக் குடலாட ஓடி வந்தனர். பட்டினத்தார் பாதத்தில் வீழ்ந்து பணிந்தனர்.

என்ன இது? யார் நீங்கள்? என்ன வருத்தம்?

ஸ்வாமி! இவன் என் மகன். இவள் என் நாதன் உடன் பிறந்த நாத்தனுர். அவளும் அடியேனும் விதவைகள் ஆயினேும்.

அவளுக்கு ஒரு பெண். பருவம் எய்தினள். இவனுக்கு அவளை, மணம் செய்து வைக்க எண்ணினேும். எங்கட்கு இவனே தான் எதிர் நாளில் ஆதரவு. இவனே மணம் செய்து கொள்ள மாட்டேன் என்று மறுக்கிருன். பெரும் சாதுக்களையே பின் பற்றித் திரிகிருன். ஸ்வாமி! குடி விளங்க இவனைக் கூட்டி அனுப்புங்கள்! உங்கட்குக் கோடி புண்ணியம்!

இதற்கா அழுகிறீர்கள்! அட பாவமே! பகபக என்று சிரித்தார் பட்டினத்தார்.

அப்பா! தாய் சோல் துறந்தால் வாசகம் இல்லை. தந்தை ஸ்தானத்தில் அத்தை இருக்கிருள். தந்தை சோல் மிக்க மந்திரம் இல்லை.

போ! மணம் செய்து வாழ்ந்திரு! இல்லறம் ஏற்றப் பின் இருவருமாக இருந்து சாதுகட்குத் தொண்டு செய்ய லாம் அல்லவா!

ஸ்வாமி! அதுதான் என் விதியாயின், என்னுல் மீற முடியுமா? அதனுல் தான் தாங்களும் கலியாணம் செய்து கோள் என்று கட்டளை இடுகிறீர்கள்! புனித தங்கள் வாக்குப்படியே போகிறேன்! அடியேன் திருமணத்தில் வந்து தாங்கள் ஆசி கூறுவதானுல் இபபோதே புறப்படுகிறேன்.

அப்பா! புலன்களின் சேஷ்டை போல்லாதது. அவைகளைக் கட்டி ஆள்வது மிகவும் கஷ்டம். அவைகளை இல்லத்தில் இருந்தே ஜயிப்பது புத்திசாலித்தனம். துறவு அதன் பின் தோன்றினுல் உரம் பேற்று அது நம்மில் உறவு கோள்ளும்.

ஆசி செய்ய வேண்டும்; அவ்வளவு தானே! அவசியம் வருகிறேன்.

வரவேணும் ஸ்வாமி! என்று வணங்கிச் சென்ருன்.

திருமண முயற்சிகள் விறுவிறு என்று நடந்தன. மேள தாளம் முழங்குகிறது. மாங்கல்ய தாரணமும் ஆயிற்று.

பிட்சைக்கு வந்த அடிகட்கு, கோடுத்த வாக்கு நினைவில் குறுக்கிட்டது. மண மண்டபத்தில் புகுந்தார். அவர் நினைவாகவே இருந்த மணமகன், தாயைக் கண்ட கன்று போல் மனைவியைக் கைப்பிடித்து எழுந்தான். எட்டுறுப்பும் நிலம் தோய வணங்கினுன்.

''நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக்கூடி
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்

காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்தொளையில் கால் நுழைத்துக்கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த குரங்கதனைப் போல
அகப்பட்டீர்! கிடந்துழல அகப்பட்டீரே!.

வரம்பில்லாத பொய்; அதன் மூலம் அளவிலாத வருவாய்; அதன் பிறகு, புண்ணியம் இல்லாத பூவையர் கூட்டம். புற்றீசல் போல் வருஷத்திற்கு இரண்டு பிள்ளைகள்; காப்பதும் முடிவதில்லை; கைவிடவும் மனம் இராது. போதும் போதும் உலக சுகம் என்று இருபுறமும் சாயும் இடர்ப்பாடு; விடுதலை யில்லையா என்று விம்மு நிலை. இந்த நரர் வாழ்க்கைக்கு வானரக் கதைதான் நல்ல உதாரணம்.

பேஷ்! பேஷ் என்று பாடலைப் பாராட்டினர் பலர்.

மணம் முடிந்து 10 தினங்கள் ஆயின. தாயும் அத்தையும் வேறு ஒரு ஊர்க்குப் போயிருந்தனர்.

காலையில் தம்பதிகள் எழுந்தனர். உடல் மதமதப்பாயிருந்தது. அதன்மேல் க்ஷவரம் பண்ணிக்கொண்டான். எண்ணெய் ஸ்நானம் செய்தான். பழைய சோறு எருமைத் தயிரிட்டு உண்டான். பாயில் படுத்தான். படுத்ததும் நெடுநேரம் நித்திரை. விழித்தான். ஸ்திரீ சங்கமம் செய்தான். அன்று மாலையே ஜன்னி கண்டது. விவரம் உணர்ந்து தாயும் அத்தையும் திரும்பினர். வயித்திய சிகிச்சைகள் பல. பயனில்லை; மறுநாள் காலை 8மணிக்கு இறந்தான்.

புலனுக்கு அடிமையானல், எவ்வளவு.விரைவில் அழிவு என்பதை பயங்கர இவ் வரலாறு பறையறைகின்றது அல்லவா!

குய்யோ முறையோ குரல். ஊரே திரண்டது. பகல் 11 மணிக்குப் பிட்சைக்கு வந்தார் பட்டினத்தார். அவரைக் கண்டனர் சிலர். பாவையை மணந்து பததுநாளில், வாழ்த்துரைத்த தங்கள் வாக்கும் வறிதுபட, அநியாய மரணம் அடைந்தான் என்று அலறியழுது அறிவித்தார்கள்.

அடிகள் திருவுளம் நொந்தது. நேரே அங்குச் சென்ருர். அவரைக் கண்ட ஒவ்வொருவரும் கோ வென்று

குழறினர். சும்மா யிருங்கள்! என்று பிரேதத்தைப் பார்த்தார். சிறக்க நெடுநேரம் சிந்தித்தார்.

வடிவந்தானும் வாலிபம் மகளும் தாயும் மாமியும்
படிவந்தாரும் ஊரிலே பழிகொண்டாடல் நீதியோ?
குடிவந்தானும் ஏழையோ? குயவன்தானும் கூழையோ
நடுநின்றானும் வீணனோ? நகரம் சூறை ஆனதே!

என்று பாடி நிறுத்தினர்.

மண்ணுமுருகும் மரம்உருகும் மாயையுருகும் மாலுருகும்
பெண்ணு முருகும் ஆணுருகும் பேதாபேத வகையுருகும்
அண்ணலுருகும் இடித்தமர்ந்த ஆத்தாள் உருகும் அரவணையான்
எண்ணியுருகும் குருநாதன் என்பால் உரைத்த ஓர்மொழியே,

என்று பாடி, இறந்தவன் மேனிமேல் விபூதியை யிட்டனர்.

என்ன வியப்பு! மரணமான மகன், உறங்கினவன் போல துள்ளித்துடித்து எழுந்தான். வந்த அடிகளை வணங்கினன். அங்கிருந்தார் ஹரஹர முழக்கம் செய்தனர்.

எழுந்தவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஸ்வாமி! இங்கு என்ன நடந்தது? என்றான்.

பகபக என்று நகைத்தார் பட்டினத்தார்.

எருவாய்க்கு இருவிரல்மேல் ஏறுபுழுக் கூட்டுக்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடந்தாயே
நீரோடும் தாரைக்கே நீ!

என்றார். உண்மையை அவன் அதன்பின் உணர்ந்து தேளிந்தான். வாயார அடிகளை யாவரும் வாழ்த்தினர்.

துரிய மலை மீதுளதோர் சோதிவளநாடு
தோன்றுமதில் ஐயர்நடம் செய்யும் மணிவீடு
தெரியுமது கண்டவர்கள் காணில் உயிரோடும்
செத்தார் எழுவரென்று கைத்தாளம் போடு!

என்ற பாடலும் இதை அறிவிக்கின்றது அல்லவா.

அங்கிருந்து மதுரைக்குச் சென்றார்; மீனாட்சி சுந்தரேசரை வணங்கினர்.

விடப்படுமோ இப்பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனம்
திடப்படுமோ நின் அருளின்றியே தினமே அலையக்
கடப்படுமோ அற்பர்வாயிலில் சென்று கண்ணீர் ததும்பிப்
படப்படுமோ? சொக்கநாதா சவுந்தர பாண்டியனே.

என்று பாடிப் பரமனை வணங்கினுர்.

* * * * *

கோங்கு நாட்டில் சென்ருர். பேரையூர், சிறந்த அவிநாசி முதலிய பல தலங்களைச் சேவித்தார். நெடு நேரம் ஒரு கிராமத்தில் நிஷ்டையில் இருந்தார். கண் விழித்தார். பாதியிரவு ஆகியிருந்தது. பசி காதடைத்தது. எழுந்தார். பல வீதிகள் சென்ருர். எங்கும் கதவடைத்திருந்தது. ஒரு வீட்டில் மட்டும் விளக்கொளி. அவ் வீட்டு வாயிலில் நின்ருர். கை தட்டினுர்.

வெளியூர் சென்று மீண்ட அவ் வீட்டிற்கு உரியவன், அவரை முன்பின் அறியாதவன்; எட்டிப்பார்த்தான். உறக்கமா, விழிப்பா என்று அறிய கை தட்டும் கள்ளனென நினைத்தான்.

ஓடிவந்து பிடித்தான். அடியடி என்று அடித்தான். அடிவிழும் போது எல்லாம் படுவயிறே! படு! என்று பதறினுர் அடிகள்.

இந்த ஓசை கண்டு விழித்த எதிர்வீட்டிற்கு உரியவன். வீதியில் வந்தான். விவரம் உணர்ந்தான். அடித்தானைப் பிடித்தான்.

அடபாவி! பட்டினத்தார் பரமஞானி. இவரையா அடிக்கிருய்? என்று உறுமினுன்.

அட! இவரா பட்டினத்தார்? கேள்விப்பட்டிருக்கிறேன்; கண்டதில்லை. என்ன அபசாரம் செய்தேன் ஸ்வாமி! இப் பாவியை மன்னியுங்கள் என்று கதறினுன்.

பசி வந்தால் கை தட்டல் இவர்க்குப் பழக்கம். அவர் பசியை முதலில் ஆற்று! என்று சொன்னுன் எதிர் வீட்டான்.

அவன் இன்னம் உண்ணவில்லை. சாதம் இருந்தது. அழைத்துச் சென்றான். பத்தினியும் தானுமாக உணவு பறிமாறினான்.

பட்டினத்தடிகள் சிறிது நேரம் சோற்றைப் பார்த்த படியே யிருந்தார். அதன் பின்,

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல
சேணும் கடந்த சிவனடிக்கல்ல என்சிந்தை கெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படும்துயர் சற்றல்லவே.

இருக்கும் இடம் தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி.

என்று இரண்டோரு பாடல்களைப் பாடினர். எதிரே போட்டு போட்டு நீர் சிந்துகிறது. ஓ! மழை பெய்கிறதா என்ன? ஏறிட்டு நோக்கினார். மழையில்லை. தம்பதிகள் தம் தவறு எண்ணிச் சிந்தும் கண் மழைதான் அது.

இரங்கியது திருவுள்ளம். நீ ஏனடா அழுகிறாய்? நீ அடித்த அடிக்கும், போட்ட சோற்றிற்கும் சரியாய்ப் போச்சு போடா! என்று வேடிக்கையாகப் பேசி, அவனை யும் அண்மையில் அமர்த்தினர். உண்ண வைத்தார்; அவ னுடன் தானும் உண்டார்.

பத்திரகிரிப் பெயரில் இரண்டு அரசர்கள். ஒருவர் வடதிசையில் உள்ள உஞ்சேனை மாகாள மன்னர். மற் றொருவர் தென்னாட்டுப் பத்திரகிரி.

வடதிசை யாத்திரை சென்ற பட்டினத்தார், உஞ் சேனை மாகாளரை வணங்கினார். காட்டிலுள்ள கணபதி ஆலயத்தில் புகுந்தார். பரஞான நிஷ்டையில் இருந்தார்.

மன்னர் மாளிகையில் ஒருநாள் களவு செய்தாரைத் துரத்திவந்தனர் காவலர். காட்டு வழி வந்த கள்ளர்கள் கவர்ந்த நகைகளைக் கண்ட கண்ட இடங்களில் வீசி விட்டு ஓடினர். குறித்த அந்த இடத்தில் நாளை வந்து எடுத்துக் கொள்ளலாம் என்பது அவர்கள் எண்ணம்.

காட்டுக் கோயிலில் புகுந்த ஒரு கள்ளன் தமது முன்னைய பிரார்த்தனையின்படி ஒரு இரத்தின ஆரத்தைக் கணபதி மார்பில் விழும்படி வீசியிட்டு ஓடினன். அது தவறி கணபதியின் பின் புறம் இருந்த பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது. நிஷ்டையில் இருந்த அவர் அதை அறியார்.

ஒரு கள்ளர் கூட அகப்படவில்லையே என்று வருந்தித் தேடி வந்த காவலர் கணபதியின் பின்புறம் இருந்த அடிகளைக் கண்டனர்.

இதோ ஒரு இரத்தின ஆரம். கள்ளருள் ஒருவன் அகப்பட்டான் என்று கலகலப்புச் செய்தனர். பிடித்துச் சென்றனர். கண் விழித்த அடிகள் விளைவறியாமல், சிவ சிவ என்று இருந்தார். பிற கள்ளர்களைக் காட்டு காட்டு என்று ஏவலாட்கள் அடிகளை அடியடி என்று அடித்தனர். எதற்கும் சிவசிவ பதில்.

அரசர்க்கு இது அறிவிக்கப் பெற்றது. ஞானியர் போல் நடித்தவனை, கழுமரத்தில் ஏற்றுக என்பது காவலர் கட்டளை. அப்படியே கழுவில் அடிகளை ஏற்றும் செயலில் இறங்கினர். பாவக் கழுமரத்தை அடிகள் பார்த்தார்.

அவ்வளவுதான். எதிரிலிருந்த கழுமரம் குபீரென்று பற்றி எரிந்தது. அஞ்சினர் கொலையாளிகள். ஓட்டம், பெரு நடை கொண்டு ஓடினர். அரசருக்கு விவரம் அறிவித்தனர்.

ஓடி வந்தார் மன்னர். பட்டினத்தடிகளைப் பார்த்தார். சிவதேஜஸைக் கண்டு சிலிர்த்தது உடல். வீழ்ந்து வணங்கினர். மன்னிக்க வேண்டினர். ஆறுதல் கூறிய அடிகள், அரசர்க்கு ஐந்தெழுத்தை உபதேசித்தார். அதன் பின், அங்கிருந்து அகன்றார்.

தென்னாட்டுப் பத்திரகிரி பார்த்திபர்க்கும் திருவிடை மருதூரில் உரிய பேறு உதவினர். திரு ஒற்றியூர்க்கு வா என்பது, திருவிடை மருதூர் மகாலிங்கர் கட்டளை.

வரும் வழியில் திருவெண்காட்டிற்கு வந்தார். சேந்தனர் மனைவியும் மகனும் வந்து கதறினர். என்ன செய்தி என்றார்.

ஸ்வாமி! தங்கள் கட்டளைப்படி சேந்தனர் பொருளைச் சூறையிட்டார். அதிகாரம் தந்தவர் யார் என்று அவரைச்

சிறையில் அடைத்தார் அரசர் என்று, பொருமியழுது அவர்கள் புலம்பினர்.

அப்படியா என்று வீரிட்ட அடிகளார்,

மத்தளை தயிருண்டானும், மலர்மிசை மன்னினானும்
நித்தலும் தேடிக்காணு நிமலனே! அமலமூர்த்தீ!
செய்த்தளைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி, என்முன் காட்டு வெண்காட்டுளானே.

என்று பாடினர். அவ்வளவில், கருணையே வடிவான கணபதி யெம்பெருமான் காட்சியாயினர். வித்தக சேந்தனுரை விலங்ககற்றினுர். அடிகள் எதிரில் நிறுத்தினர்; நொடியளவில் இது நிகழ்ந்தது. மின்னல் போல் அத் தோற்றம் கனிவு காட்டிக் கரந்தது. சேந்தர் வியந்தார். வாய்த்த குருநாதரை வணங்கினுர். வணங்கினுரை அடிகள் வாழ்த்தினுர்.

சேந்தரே! சிதம்பரம் செல்லும். பாடுபட்டுத் தேடிய பணம் கொண்டு, நலம் சிறந்த மகேஸ்வர பூஜையை அங்கு நடத்தும். அதன் மூலம் பேருன முத்தி பெறுவீர் என்று அவரைக் குடும்பத்தோடு அனுப்பினர்.

அதன் பின் பட்டினத்தடிகள், அங்கிருந்து புறப்பட்டார். சிதம்பரம் சீகாழி முதலிய சிறந்த தலங்களைச் சேவித்தார். திருக்காரோணத்திற்கு வந்தார். சிவத்தைச் சேவித்தார். அரிய தியானத்தில் அமர்ந்தார். நெடுநேரம் பொறுத்துக் கண் விழித்தார்.

பசியோ பெரிதும் பாதித்தது;

அத்திமுதல் எறும்பு ஈருன உயிரத்தனைக்கும்
சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகா!—மெத்தப்
பசிக்குதையா பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோணரே!

என்றதும், மங்களமான ஒரு அம்மை எதிர்வந்தாள்.

பாவம் ஸ்வாமியார்க்குப் பசிபோல் இருக்கிறது. கொஞ்சம் அமுது இருக்கிறது; கொடுக்கிறேன்; உண்கிறீரா?

கொடு அம்மா! காமாட்சி போல் வந்தாய்!

கையில் உருட்டிவைத்த அமுதை உண்டார்.

ஆ! என்ன அமுதமா யிருக்கிறதே! பேஷ்! பேஷ்! என்றபடி உண்டார். கொடுத்த நீரையும் குடித்தார்.

தாயே! நீ யார் அம்மா! உரிய சமயத்தில் வந்து உதவினையே!

என்னை அறியாயோ குழந்தாய்! காமாட்சி போல் இருக்கிறாய் என்றாயே! காமாட்சிதானடா அப்பா! நான் காமாட்சியேதான்! நீலாயதாட்சி என்றும் என்னை யழைப்பர்; என்ற பதில் எழுந்தது.

ஆ! ஹா! என்றெழுந்தார்! நகைமுகமாகி, பளபளத்த ஒளியுடன், திருவுருக்கரந்தாள் வந்ததேவி.

கை குவித்தார். அம்மா! அம்மா!! அம்மா!!! என்று அலறினார்.

புறப்பட்டார். மற்றும் பல தலங்களை வணங்கினார்; சிவனார் கட்டளைப்படி திருவொற்றியூரை யடைந்தார். ஒற்றியூரானை, தியாகேசனை, சித்தம் கனியச் சேவித்தார்.

கண்டம் கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு!

என்று பாடினார்; பாடிப் பரவசம் ஆயினார்.

உலக முழுவதும் தூய குரு மூர்த்தமாகத் தோன்றுகிறது. மற்றொரு சமயம் அகில உலகமும் இலிங்கங்களாகத் தோன்றுகின்றது. ஆ! எதிர்படும் யாவரும் சிவசொரூபமாகத் தோன்றுகின்றனர்.

என்ன இன்பம்! ஆஹா! பிரபோ அகிலமும் நீயே! அனைத்தும் உன் சொரூபமே! அனைத்தும் உன் ஆடலேதான் என்று அறிகிறேன்.

வாழி திருவருள்! வாழி என்று வழுத்தினார்.

வாவியெல்லாம் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருஒற்றி யூர்.

திருஒற்றியூரா! தியாகேசா!

இனி தனித்திரேன்; நீயும் நானுமாய் ஏகபோகம் ஆய், பிரபோ! பிரபோ! அந்நாள் அணுகுவதை அறிகிறேன்.

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோ தொன்று வேண்டுவல்யான்
செய்யும் திருஒற்றி யூருடையீர் திருநீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவும் கற்பியுமே!

என்று எடுத்த குரல்கொடுத்துப் பாடினர்.

அதோ மாடு மேய்க்கிருர்கள் சிறுவர்கள்.

ஓடினர். அவர்களை அணுகினர்.

தம்பீ! உங்கள் விளையாட்டில், என்னையும் சேர்த்துக் கொள்ளுங்களடா!

அட! எவ்வள பெரிய ஆளுநீ! என்னய்யா எங்களோடா விளையாடப் போகிறீர்!

தம்பீ! சிறுசு பெரிசு என்ற வித்தியாசம் ஏதடா!

ஆண்டவனே கூத்து ஆடுகிருன்; அவனுட, அகிலமும் ஆடுகிறதே! உங்கட்குத் தெரியவில்லையா?

என்னையா சொல்றே! ஆடுதா! எது ஐயா ஆடுது!

ஆடுவது மட்டு மல்ல; பாடவும் பாடுதடா அப்பா! பாடுதே!

என்னது? ஆடுதாம் பாடுதாம்; எது ஐயா அது?

ஆடும் பாடும் அது எது தெரியுமா? அதுதானடா அது!

அது அது என்ரு' எது அது? என்னுசாமி சொல்றே நீ!

தா தை தக்கத் தோம்! தோம்! தோம்! தோம்! தாதை தக்கத் தோம்! தகிர்த திமி! தா தை தை!

மண்ணாசைப் பட்டேனே, மண்ணுண்டு போட்டதடா!
பொன்னாசை பெண்ணாசை, போகேனே என்குதே!
கன்னிவன நாதா! கன்னிவன நாதா!

மூலமறியேன் முடியும் முடிவறியேன்
ஞாலத்துள் பட்டதுயர் நாட நடக்குதடா!

பாடுகிருர் அடிகள்; பாடிக்கொண்டே ஆடுகிருர்.

இருந்த பிள்ளைகட்கு அது ஒரு வேடிக்கையாக இருந்தது; அடிகளுடன் தாமும் பாடியாடினர் பாலர்கள்.

அடிகள் மணலை வாரினர்; சர்க்கரை யாக்கினர்.

பிடியுங்கடா பிடியுங்கள் என்று பிள்ளைகட்குக் கொடுத்தார்.

ஹி ஹி ஹி! அடடே! அடடே என்று முனிவரான அவரைத் தொடர்ந்து மொய்த்தனர். பல தரம் மணலை அள்ளி யள்ளி, அவைகளைக் கடலை, சுண்டல், கற்கண்டு என்று கொடுத்தார். அதன்பின் பிள்ளைகள், இப்படியும் ஒரு வித்தையுண்டா என்று வியந்தனர். அவர் ஆட்டியபடி யெல்லாம் ஆடத் தயாராயினர்.

ஒரு குழி பறிக்கச் சொன்னர். பறித்தார்கள்.

குழியில் இறங்கினர். அந்த சாலால் என்னை மூடி விடுங்கள்! கற்கண்டு ரொம்பக் கொடுக்கிறேன் என்ருர்.

சிரித்தபடி அப்படியே செய்தனர். சிறிது பொறுத்துத் திறந்தனர். எங்கே அடிகள்? ஐயோ சாமி! எங்கே போயிட்டே என்று கூவினர்.

இதோ! இதோ என்று ஒரு குரல் எழுந்தது. பார்த்தால் தூரத்தில் இருந்து வருகிருர் பட்டினத்தார்.

அடடே! நம்ப ஸாமி கெட்டிக்காருடா என்றுபாராட்டினர்கள் இளம் பாலர்கள்.

ஆடலற்புதம் இப்படிப் பல நேரம் நடந்தது.

இறுதியில் இறங்கிய குழியில், மூடிய சாலைத் திறந்தனர். அடிகள் இலிங்க வுருவாகி இருந்தார்.

அதிலிருந்து, 'சதாசிவோம் சாதா சிவோம் சதா சிவோம்' என்னும் நாதம எழுந்தது. அஞ்சிய சிறுவர்கள் ஓடினர்; அச் செய்தியை ஊரார்க்கு அறிவித்தனர்.

ஊரே திரண்டது; உண்மையுணர்ந்தது; புளகிதம் எய்தினர். போற்றினர் மக்கள்.

பட்டினத்தார் வாழ்க்கையில் நாம் அறியக் கிடப்பன பல.